# "கடற்றெழிலுக்கும் விவசாயம் போல் முக்கியத்துவம்"

## அமைச்சர் பிலிப் உறுதி


Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம்
— ரூ. 18-00
ஆறு மாதம்
— ரூ. 34-00
ஒரு வருடம்
ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 341
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம்
— ரூ. 4-00
ஆறு மாதம்
— ரூ. 7-50
ஒரு வருடம்
— ரூ. 14-00
முற் பணம்
கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் தை 7 ஜூலை 11 செவ்வாய்க்கிழமை [20-1-70]


( நமது காரியாலய நிருபர் எஸ் திருச்செல்வம் )

வடபகுதி மீனவர்களிடையே மிகவும் கடற்றெழில் பொருட்களின் விலை வாசி உயர்வு' உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் பல்வேறு தட்டுப்பாடுகள், கருவாட்டுக்கு பாவிக்கப்படும் உப்பின் விலை உயர்வு, மயிலிட்டி மீன்பிடித் துறைமுக கட்டடவேலை, டைனமைட் மூலம் மீன் பிடித்தல் போன்ற பல்வேறு அசௌகரியங்களையும் கடற்றெழிலாளர்கள். பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சகிதம் ஆராய்ந்த கைத்தொழில், கடற்றெழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன நாட்டில் விவசாயத்துக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் காலக்ரமத்தில் கடற்றெழிலுக்கு கொடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

நேற்றுக் காலை இங்கு வந்த அமைச்சர் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் அமைச்சு அதிகாரிகள் சகிதம் கைத்தொழில், கடற்றெழில் அபிவிருத்தி சம்பந்தமான மகாநாடொன்றைக் கூட்டினர்.

வடபகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 5 மின்தறி நிலையங்களையும் கிளிநொச்சி, நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் போன்ற இடங்களில் நிறுவவேண்டியதன் அவசியத்தை மகாநாடு ஆரம்பத்திலேயே உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம்

[4-ம் பக்கம் பார்க்க]

# திருமலை: நிர்வாகம், யாழ்: மருத்துவம் மட்டக்களப்பு: கலைபிரிவு

## பல்கலைக்கழக கமிஷன் முன் டாக்டர் நாகநாதன் சாட்சியம்

(நமது விசேஷ நிருபர்)

"திருமலையில் நிர்வாகக்கூடமும், யாழ்ப்பாணத்தில் மருத்துவ விஞ்ஞானப் பிரிவுகளும், மட்டக்களப்பில் கலைப் பிரிவும் நிறுவப்பட வேண்டும்" என்று நல்லூர் எம்.பி. டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் பல்கலைக்கழக கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினர்.

கொழும்பு புல்லர்ஸ் வீதியிலுள்ள தேசிய உயர் கல்விச் சபைக் கட்டிடத்தில் இச் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

சபைத் தலைவர் ஜி. பி. மலலசேகரா (தலைவர்), திரு.என். சின்னத்தம்பி, திரு. அதிகாரம் ஆகியோர் இக் கமிட்டியில் அங்கம் வகிக்கின்றனர்.

டாக்டர். நாகநாதன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவும் பிரச்னையில் சாத்தியக் கூறுபாடாக நான்கு முக்கிய விடயங்கள் பரிசீலிக்கப்பட வேண்டியனவாகும். முதலாவதாக, பல்கலைக் கழக வளவுக்கென பரந்த நிலப்பரப்பு வேண்டும்.

...திற்கு தெரிவு செய்யப்படக்கூடிய பெரும்பான்மையான மாணவர்கள் யாழ்ப்பாணப் பட்டினத்தையும் அதன் சுற்றுப்புற கிராமங்களையும் சார்ந்தவர்களாகையினால் புதிய பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்திலேயே அமைக்...

மிக அதிகமாகையாலும் பல்கலைக்கழகத்திற்கு வேண்டிய போதிய கணியை மிகவும் அதிக செலவில்தான் வாங்கமுடியும் அத்தோடு மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்கள்...

### அமைச்சரின் இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்.

அமைச்சர் பிலிப்குணவர்த்தனவின் இன்றைய வடபகுதி நிகழ்ச்சிகள்:-

8 மணி: ஆனையிறவு உப்பளம் பார்வையிடல்

10-30 மணி: பரந்தன் ரசாயனத்தொழிற்காலைக்கு விஜயம்.

3 மணி: யாழ்ப்பாணக் குடா திட்டம் பார்வையிடல்

5 மணி: நல்லூர் தேவிகா ஆர்ட்எண்டர் பிறைஸுக்கு விஜயம்

5-35 மணி: நீராவியடி வசந்தா சேலை நிலையத்திற்கு விஜயம் (கா நி)

### பிலிப் மகிழ்ச்சி


### சங்கானை மின்தறிநிலையத்தை அமைச்சர் நாளை திறக்கிறார்

அராலி, செவ்.

வலிமேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் நிறுவப்பட்டுள்ள மின்தறி நிலையத்தை கைத்தொழில் கடற்றெழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன நாளைக் காலை திறந்து வைக்கவிருக்கிறார். இவ்வைபவம் சமாசத் தலைவர் திரு. வை. இராசசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

அமைச்சர் கலந்துகொள்ளும் இவ் வைபவத்தின் போது கல்லுண்டாய் உப்பளம் பற்றிய விவகாரமும் அமைச்சருடன் ஆலோசிக்கப்படவிருக்கிறது. உப்பளத்தில் அதிக விளைச்சலுக்கு தடையாகவுள்ள சில;முக்கிய விடயங்கள் பற்றி கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. வி. கனகசபை, யாழ். கூட்டுறவு மாகாண வங்கி, வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை, மற்றும் கூட்டுறவு பரிசோதகர்கள் அடங்கிய மகாநாடொன்றில் நேற்று விவாதிக்கப்பட்டது.

பருத்தி, பட்டு, நூலாடைகள் போன்றவற்றை தயாரிப்பதற்கு வலி மேற்கு ப. நோ. கூ. சங்கத்துக்கு விதிக்கப்பட்டுள்ள அரசாங்க தடை உத்தரவை நீக்குமாறும் அமைச்சரிடம் கோரப்படவுள்ளது.



கைத்தொழில் மீன் பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய போது எடுக்கப்பட்ட படம். யாழ். அரசாங்க அதிபர் திரு பீட்டர்ஸ், உப சபாநாயகர் திரு. எம் சிவசிதம்பரம், மற்றும் பிரமுகர்களும் அமைச்சரை வரவேற்கிறார்கள்.

### பலாலி விமான நிலையத்தில் பிரமாண்டமான வரவேற்பு

அச்சுவேலியில் அமைக்கப் அதைத்தொடர்ந்து விமான ...

திரு. அ. அமிர்தலிங்கம், பருத்தித்துறை எம்.பி. திரு. ...

கைலாசநாதக் குருக்கள் அமைச்சரை வேதம் ஓதி வரவேற்றார்.

### கைத்தொழில் பேட்டை

அச்சுவேலியிலுள்ள முடிக்குரிய நிலத்திலிருந்து 65 ஏக்கர் இக் கைத்தொழில் பேட்டைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவும் பிரச்னையில் சாத்தியக் கூறுபாடாக நான்கு முக்கிய விடயங்கள் பரிசீலிக்கப்பட வேண்டியனவாகும். முதலாவதாக, பல்கலைக் கழக வளவுக்கென பரந்த நிலப்பரப்பு வேண்டும். இரண்டாவதாக, பெரு நிதி வேண்டும். மூன்றாவதாக, தகுதிவாய்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர், இன்னோரன்னோர் தேவை. அத்துடன் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு நியாயமான அளவு வசதியானதும் செலவு குறைந்ததுமான இடம் வேண்டும். இவ்வடிப்படைத் தேவைகளுள் கணிக்கப்படவேண்டிய இன்னொரு அம்சம். இப்பல்கலைக் கழகத்தைக் குறிப்பிட்ட கோட்பாடுகளுக்கும் பாரம்பரியங்களுக்கும் ஏற்ப அமைத்து வளர்த்து உருவாக்குவதற்கு ஆகும் காலமாகும்.

இன்று, பல்கலைக் கழகத்தில் கூடிய பெரும்பான்மையான மாணவர்கள் யாழ்ப்பாணப் பட்டினத்தையும் அதன் சுற்றுப்புற கிராமங்களையும் சார்ந்தவர்களாகையினால் புதிய பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்திலேயே அமைக்கப்பட வேண்டுமெனச் சில வட்டாரங்களில் விவாதிக்கப்படலாம். அங்ஙனம் அமைக்கப்படின் கிழக்கு மாகாணத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஆங்கும் ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்கவேண்டிய அவசியம் ஏற்படலாம், அதற்கு (வேண்டிய அடிப்படைத் தேவைகளான நிலப்பரப்பு, பெரு நிதி, அலுவலர் குழு (பேராசிரியர், விரிவுரையாளர், இதர அலுவலர்) ஆகியனவும் தேவைப்படும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் போதிய முடிக்குரிய காணிப் பரப்பு அநேகமாக இல்லாமையாலும், காணிவிலை மிக கலைக்கழகத்திற்கு வேண்டிய போதிய காணியை மிகவும் அதிக செலவில்தான் வாங்கமுடியும் அத்தோடு மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்கள் இப்போது கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதைக் காட்டிலும் நெடுந்தூரத்தைக கடந்தே யாழ்ப்பாணப் பல்கலைககழகத்திற்கு வரவேண்டும்

இம்மனுவில் உத்தேச பல்கலைக்கழகத்தை திருகோணமலையிலும் அதன் சில குறிப்பிட்ட பொருத்தமான பிரிவுகளை யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் நிறுவுவதன்மூலம் நிலப்பிரச்னை நிதிப்பிரச்னை, மாணவர் விடுதிப்பிரச்னை என்பவற்றைத்தீர்க்கக்கூடியதான திட்டமொன்றைத் தருகிறோம்,

4-ம் பக்கம் பார்க்க

## பிலிப் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், செவ்வாய்

''இலங்கையிலேயே 'லேத்' தயாரிக்கப்படும் முதலாவது தொழிற்சாலை இது தான். இது போன்ற தொழிற்சாலைகளுக்கு எனது அமைச்சு வேண்டிய எந்த உதவியையும் எந்த நேரத்திலும் செய்யும்.''

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலிருக்கும் இன்டஸ்றியல் என்ஜினியரிஸ் வேக்ஸ்ஸிக்குநேற்றுக்காலை விஜயம் செய்த அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தனு இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் தன் முதல் விஜயமாக அமைச்சு அதிகாரிகள் சகிதம் இத்தொழிற்சாலைக்குச் சென்றார்: தொழிற்சாலை முகாமையாளர் திரு. மகாலிங்கம் அமைச்சரை வரவேற்றார்.

தொழிற்சாலையைப் பார்வையிட்ட அமைச்சர் அங்கு 'சூளை'க்கு நெருப்பையும் ஏற்றிவைத்தார். இத்தொழிற்சாலையின் சேவைகளைப் பாராட்டிப் பேசிய அமைச்சர் இது போன்ற தொழிற்சாலைகள் நாட்டின் பலபகுதிகளிலும் அமைக்கப்பட வேண்டியது மிக அவசியம் என்றும் சொன்னார். (கா. நி)

## பிரமாண்டமான வரவேற்பு

அச்சுவேலியில் அமைக்கப்படும் இலங்கையின் [illegible]காவது கைத்தொழில் பேட்டையின் பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்து வைப்பதற்கென மூன்று நாள் விஜயத்தை வடக்கில் மேற்கொண்டுநேற்றுக்காலை பலாலியில் வந்திறங்கியகைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தனவுக்கு விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது

அமைச்சரும் அவரது குழுவினரும் நேற்றுக்காலை 9.35 மணிக்குஅரசவிமானப்படை விமானத்தில் வந்திறங்கினார். அமைச்சருடன் அபிவிருத்தித்திட்ட டைரக்டர் திரு. சி. மயில்வாகனம், கைத்தொழில் அமைச்சு உதவிச் செயலாளர் திரு. பி. முருகேசு, கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபன முகாமையாளர் திரு. கே. ஸி. தங்கராஜா, பெற்றோலியம் கூட்டுத்தாபன முகாமையாளர் டாக்டர் பேரம்பலம், மீன்பிடிக் கூட்டுத்தாபன டைரக்டர் திரு. ஓ. ஏ. கே. பெர்னாண்டோ ஆகியோர் வந்திருந்தனர்.

மெதுவாக மழை தூறிக்கொண்டிருக்கையில்வெள்ளை வேட்டி, நாஷனலுடன் சிவப்பு சால்வையும் அணிந்து அமைச்சர் விமானத்திலிருந்து இறங்கினார்.

அமைச்சருக்கு அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் சி' பீட்டர்ஸ் முதலில் மலர் மாலையிட்டு வரவேற்றார். அதைத்தொடர்ந்து விமான நிலையத்தில் குழுமி நின்ற பிரமுகர்கள் அவருக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

### தொழிற்சாலை அதிபர்கள்

விமான நிலையத்தில் அரசாங்க அதிகாரிகளிலும் பார்க்க வடபகுதியைச் சேர்ந்த பல தொழிற்சாலைகளினதும் அதிபர்களே கூடுதலாகக் காணப்பட்டார்கள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோரும் அரசியல் அதிகாரிகள் பலரும், அமைச்சரை வரவேற்க விமானநிலையம் வந்திருந்தனர்.

கைத்தொழிற் சாலைக்குச் சொந்தமான பல பெண்களும் விமான நிலையத்தில் வந்திருந்தனர். சிவஸ்ரீ ஐ.

### கைத்தொழில் பேட்டை

அச்சுவேலியிலுள்ள முடிக்குரிய நிலத்திலிருந்து 65 ஏக்கர் இக் கைத்தொழில் பேட்டைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் முதல் படியாக ஒரு பகுதி அபிவிருத்திசெய்யப்பட்டு வருகின்றது. மீதியான பகுதி பின்னர் அபிவிருத்தி செய்யப்படும்.

முதல் திட்டத்துக்கு மட்டும் சுமார் 70 லட்சம் ரூபா வரையில் செலவுசெய்யப்படும்.

இதில் மூன்று வெவ்வேறு அளவுகள் கொண்ட 35 ஆலைக்கட்டடங்கள் நிறுவப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

# 'தேசிய அரசாங்கம் வந்தபின் பொருளாதார புரட்சி'

## அமைச்சர் பிலிப் பெருமிதம்

''1956-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டுவரை நாட்டில் கலாச்சாரப் புரட்சி நடந்தது. இதுகாலகிரமத்தில் தெற்கிலும் வடக்கிலும் பொருளாதாரப் புரட்சியாக மாறியது. 1965-ம் ஆண்டு பதவி ஏற்ற தேசிய அரசின் பிரதமரும் அமைச்சர்களும் இதனைச் சீர்திருத்தினார்கள்.''

அரசாங்க செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் பேசுகையில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது:

யாழ்ப்பாணத்துக்கு நான் புதிய ஆளல்ல. 1934-ம் ஆண்டிலிருந்து 55-ம்ஆண்டு வரை அடிக்கடி இங்கு வந்துள்ளேன். நாட்டில் ஏற்பட்ட கலாச்சாரப் புரட்சி பொருளாதாரப் பிரச்னையானது. இதில்வெற்றிகாண நவீன முறைகளைக் கையாண்டு தொழில் துறையில் நாம் முன்னேறவேண்டும்.

கடற்றொழிலும், விவசாயம் போல அபிவிருத்திசெய்யப்படும். இதுவும் ஒரு கைத்தொழில்தான். அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை சகல நவீன வசதிகளையும் கொண்டதாகவிருக்கும் என்றும் வடக்கின் பல்வேறு பிரச்னைகட்கும் தீர்வுகாணும் என்றும் அமைச்சர் சொன்னார்.

இம்மாநாட்டுக்கு அ. அமிர்தலிங்கம் எம். பி;

(4-ம் பக்கம் பார்க்க)

# 'கைத்தொழில் நாடாக யாழ் குடாநாடு விளங்கவேண்டும்'

## 'மகாவலி திரும்பும்வரை நீரை,குறைத்து பாவியுங்கள்' அச்சுவேலியில் அமைச்சர் பிலிப்

[நமது கோப்பாய் நிருபர்]

கோப்பாய், செவ்

எமது அரசாங்கம் இன்று கைத்தொழிலையும் விவசாயத்தையும் முன்னேற்றுவதிலேயே அக்கறை கொண்டுள்ளது. நமது நாடுபொறியியல் துறையில் மிகவும்பின் தங்கிய காலத்திலேயே தொழில் அபிவிருத்திச்சபை ஏற்பட்டது. யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரையில் விவசாயம் கைத்தொழில் முதலியவற்றில் திறமைசாலிகள் காணப்படுகிறார்கள். அவர்களதுதிறமைக்கு ஊக்கமளித்து உற்சாகம்தருவதற்கு நாம் ஆயத்தமாகவுள்ளோம்.

மேற்கண்டவாறு நேற்று மாலைஅச்சுவேலியில் அமைக்கப்படும் புதிய கைத்தொழில் பேட்டைக்கான அத்திவாரக் கல்லை நாட்டிவைத்து உரையாற்றுகையில் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தன கூறினார்.

அமைச்சருககு அச்சுவேலியில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலைசாரணர்களின் அணிவகுப்பைத் தொடர்ந்து அச்சுவேலி சென் திரேசாக் கல்லூரி மாணவர்களின் பாண்ட்வாத்தியஇசைநடைபெற்றது அமைச்சர் அலங்காரப் பந்தலின்கீழ் அழைத்துச் செல்லப்பட்டார், யாழ் அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீற்றர்ஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்த காலத்தில் இத்தகைய தொழில் பேட்டையை நிறுவுவதற்குகாணிகளை விலைக்கு பெறவேண்டியிருந்தது, ஆனால் அந்நிலை இன்று மாறிவிட்டது, இந்நாடு காலத்துக்கு காலம் குடிசனத் தொகையில் அதிகரித்து வருகிறது படித்த வாலிபர்களுக்கு உத்தியோகமும் வேதனமும் அளிக்க வேண்டிய அவசியத்தில் அரசாங்கமுள்ளது, எனவே வருங்காலத்தில் இந்நாட்டு பொருளாதாரம் விஸ்தரிப்படைய விவசாயத்தை மாத்திரம் நம்பியிராது கைத்தொழிலையும் அபிவிருத்தியடையச் செய்தல் அவசியம் இக்குடாநாடு இலங்கை பூராவுக்கும் சிறந்த கைத்தொழில் நாடாக விளங்க வேண்டும், விவசாயத்தைப் பொறுத்தவரையில் நீர்த் தட்டுப்பாடும் கவனிக்கப்பட வேண்டியதவசியம். குடிசன அதிகரிப்பால் இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மகாவலி கங்கையைத் திசை திருப்பும் திட்டம் அதிவிரைவில் அமுலாகவுள்ளது.

அத்திட்டம் நிறைவேறுமட்டும் விவசாயிகள் மிகக் கட்டுப்பாட்டுடன் நீரைப் பாவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சோஷலிசத்தில் நாம் பெரிதளவு முன்னேறுகின்றோம். தேசிய அரசாங்கம் அதை முன்னேற்றுகிறதென்றும்

(4-ம் பக்கம் பார்க்க)

## சொற்பொழிவு

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின்செயலாளர் வணதணிநாயகம்அடிகள்எதிர் வரும் 22-ம் திகதி மாலை 5-30 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ் மொழியும் தமிழ்மொழி ஆராய்ச்சியும்என்னும் பொருள்பற்றிசொற்பொழிவாற்றுவார்.

லொறி விபத்து

## தொழிலாளியை தப்பவிட்டு வியாபாரியை மோதியது

யாழ்ப்பாணம், செவ்.

லொறி விபத்தொன்றில் மயிரிழையில் உயிர் தப்பினார்நகரசுத்தித்தொழிலாளி ஒருவர். ஆனால் அடுத்த கணமே அந்த லொறி மற்றொரு வயோதிப வியாபாரியை மோதியதாம்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்னுள்ள வீதியில் நடைபெற்றது இவ் விபத்தில் காயமடைந்தமுத்தையா (60வயது) ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குப்பை அள்ளிக்கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் இவ் விபத்தில் தப்பிவிட்டதாகவும் வீதியில் போத்தல் வியாபாரம் செய்துகொண்டிருந்த முத்தையா என்பவரை மோதியதாகவும் விசாரணையில் தெரியவந்தது. மருந்துக்கடை ஒன்றையும் இது மோதியதால் கடைக்கும் சேதமேற்பட்டது. சைக்கிள் ஒன்றும் இதனல் முற்றாகச் சேதமடைந்தது, (கா. நி)

# 'என்மீது சுமத்தப்படும் குற்றங்கள் ஆதாரமற்றவை'

## பத்திரிகையாளர் மாநாட்டில் கல்வி அமைச்சர்

கொழும்பு, செவ்வாய்

கொழும்புபோன்ற வசதியான இடங்களில் கடமையாற்றுவதற்கு 40,000 ஆசிரிய தம்பதிகள் விரும்புகின்றனர். இவர்கள் பின்தங்கிய இடங்களில் கடமையாற்றமறுக்கின்றனர். இவர்கள் அனைவரையும் வசதியான இடங்களில் நியமிப்பதற்கு கடவுளால் தன்னும் முடியாது, மனிதாபிமானமற்ற முறையில் நான் நடந்து கொள்கின்றேன் என்று என்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை'

நேற்றுகொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய கல்வி அமைச்சர் திரு ஐ, எம், ஆர் ஏ, ஈரியகொல்லமேற்கண்டவாறு தெரிவித்தார், கல்வி அமைச்சு மீது நிலவும் தப்பான அபிப்பிராயங்களைப் பற்றி விளக்குவதற்காக கல்விஅமைச்சர் இம் மகாநாட்டைக் கூட்டினார்,

கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் ஒரு லட்சத்து 14 ஆயிரம் ஆசிரியர்களையும்மாணவர்களின் நன்மை கருதியே இடமாற்றம் செய்கின்றோம், இவ் இடமாற்றத்தால் முன்னர்வசதியான இடங்களில் மட்டும் கடமையாற்றிய பட்டதாரி ஆசிரியர்கள் இப்போது பரவலாக பின்தங்கிய இடங்களிலுமுள்ள பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர், இதனால் பல பின்தங்கியமாணவர்களுககு கூடுமான அளவுககு அரசாங்கம் கல்விவசதியை அளிக்க முடிகிறது:

என்மீது சுமத்தப்படும் குற்றங்கள் அநீதியானதாகும். எனது மருமகள் ஒருவர் மதவாச்சி போன்ற வசதி குறைந்த இடத்திலும் கல்வி உதவி டைரக்டர் திரு. ஜி. அலஸின் 2 மருமக்கள் இனிதும என்ற பின்தங்கிய இடத்திலும் கடமையாற்றுவதை உதாரணத்துக்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன். ஆசிரிய சேவை புரிய வந்தவர்கள் மாணவர்களின் நலன் கொண்டு உழைக்க வேண்டும்.

சுருட்டு

## தொழிலாளர் மோதல்

### வீடு தீக்கிரை

யாழ்ப்பாணம், செவ்.

ஊர்வலமாக வீதிவழியே சென்ற சுருட்டுத் தொழிலாளர்கள் சிலர் ஒரு சுருட்டுக் கம்பனி உரிமையாளர்களையும், கடமையில் ஈடுபட்டிருந்த சில தொழிலாளர்களையும் தாக்கியதாக கூறப்படும் சம்பவம் ஒன்று சுதுமலை தெற்கில் நேற்று நடைபெற்றது.

சம்பள உயர்வு கொடுக்க மறுத்ததன் காரணமாக வேலைகளைப் பகிஷ்கரித்துள்ள தொழிலாளர்களே வேலைசெய்தவர்களை தாக்கியதாகவும், வீடு ஒன்றுக்கு தீ வைத்ததாகவும் கூறப்படுகிறது. இதில் படுகாயமுற்றநால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக இருவரைப் பொலிசார் கைது செய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## தேவை

சிப்பந்திகள்

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்ற சிப்பந்திகள் தேவை. நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் சுகதேகிகளாகவும் 20 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். கல்வித் தராதரப்பத்திரங்கள், நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 1777

கிறைண்டர் இயக்குனர் ஒருவர் தேவை. முந்திய அனுபவம் விரும்பத்தக்கது. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும் எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, கே கே எஸ். றோட், யாழ்ப்பாணம் 1776

தண்ணீரூற்றில் உள்ள ஓர் டியூட்டரியில் ஆங்கிலம் மற்றும் விஞ்ஞான பாடங்கள் போதிக்கக்கூடிய ஆசிரியை ஒருவர் உடன் தேவை. விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசதாரரை நேரில் சந்திக்கவும். சோ. இராசையா, தண்ணீரூற்று. முள்ளியவளை. 1775

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 20—1—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.
பகல் 12-00, 1-30.
மாலை 4-25, 5-00, 6-00.
இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: காலை 7-30 பகல் 12-03, 1-00.

இரவு 7-15 வயலின் — ரி. வி. பிச்சையப்பா, 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9 30 பேச்சு — கலாநிதி க. கைலாசபதி, 9-40 கதாப்பிரசங்கம் — ஆர். வடிவேல்

## பிரிவுபசாரம்

உடுவில், திங்கள்

பல்லாண்டு காலமாக மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் உதவி அதிபராக கடமையாற்றி அண்மையில் இளைப்பாறியுள்ள திரு ஜி.என் இராஜசிங்கத்தைக் கௌரவிக்கும் முகமாக இம்மாதம் 24-ம் திகதி மேற்படி பாடசாலையில் ஒரு பிரிவுபசாரவிழாவை

## அரசாங்கக் கேள்விகள்

### விற்பனைத் திணைக்களம்

விற்பனைத் திணைக்கள மத்திய களஞ்சியத்தில் பழுதடைந்த கடலை, கடலைப் பருப்பு வகைகள் கால்நடை உணவுப் பொருட்களாக விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விபரங்களுக்கு: யாழ்ப்பாணம், அரசாங்க செயலகம், உதவி விற்பனை ஆணையாளர் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும். 1921

## பண்டத்தெருப்பு இராமசபை

### கேள்வி விளம்பரம்

பண்டத்தெருப்பு கிராமசபைத் தலைவரால் கீழ்க்காணும் வேலைகட்கு 1970ம் ஆண்டு மாசி மாதம் 8-ம் திகதி காலை 9-30 மணி வரை சீல்வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக் கிரயமாக ரூபா 10/-ம் கட்டுப்பணமாக ரூபா 50/-ம் கட்டியதன்பேரில் கேள்விப்பத்திரங்கள் 7-2-70 பி. ப. 2-00 மணிவரை வழங்கப்படும். இதற்காய ஏனைய விபரங்கள் யாவும் கிராமசபைக் காரியாலயத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

கேள்விப்பத்திரக் கிரயம் திருப்பிக் கொடுபடமாட்டா

வேலைகளின் விபரம்

1. மாரீசன்கூடல் தாழ்வு வெள்ள வாய்க்கால்.
2. சித்திரமேளி வெள்ள வாய்க்கால்.

சி.சி. கனகசபாபதி, ஜே.பி.
தலைவர்,
கிராமசபை,
பண்டத்தெருப்பு.

18 1-70 1919

## மின்சார வசதி

பருத்தித்துறை, திங்கள்

கோயிற்கடவைக் கிராம முன்னேற்றச் சங்கம். வடமார்காண உதவி அரசாங்க அதிபர்மூலம் மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக கோயிற்கடவை விநாயகர் ஆலயத்திற்கு இம்மாத இறுதிப்பகுதியில் மின்சாரவசதிகளும் வழங்கப்படவிருக்கின்றன. அன்றைய தினம் நடாத்தவிருக்கும் மின்சார அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உபசபாநாயகர் திரு. மு சிவசிதம்பரம் பிரதம

உ
சிவமயம்

# மகாலெட்சுமி ஸ்டோர்ஸ்

## திறப்புவிழா

அன்புடையீர்!

நிகழும் சௌமிய வருடம் தை மாதம் 8-ம் திகதி புதன்கிழமை (21-1-1970) முற்பகல் 11 மணி 10 நிமிஷம் முதல் 11 மணி 24 நிமிஷம் வரையும் உள்ள மேடலக்கின சுப முகூர்த்த வேளையில் அநேக வாடிக்கைக்காரர்களின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி 228-ம் இலக்க எமது ஸ்தாபனத்தில்

இறைவன் திருவருளால்

"மகாலெட்சுமி ஸ்டோர்ஸ்"

(நவதானியம் பலவித சாப்பு சாமான்களும்)

புதிய கிளை ஸ்தாபனத்தை ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்

இங்ஙனம்
மு. விசயரத்தினம்
மு. பூபாலசிங்கம்

இங்ஙனம்
ச. முருகேசு
திருமதி ம. கனகரத்தினம்

தலைமைஸ்தாபனம்:
மகாலெட்சுமி ஸ்டோர்ஸ்
S. M.K. பீடி உற்பத்தியாளரும் விநியோகஸ்தரும்
26, புதுச்செட்டி தெரு,
கொழும்பு-13
Telegrams: "MAHALUCK" Telephone: 27875
1920

## இவ்வருடம் கோலாகலமாக நடக்கும்

# பாடசாலை விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள்

பருத்தித்துறை, திங்கள்

1870-ம் ஆண்டு கல்வித் திணைக்களம மிகக்கோலாகலமாகப் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளது. மகாவித்தியாலயங்களுக்கும், மத்தியமகா வித்தியாலயங்களுக்குமான மெய்வல்லுனர் போட்டிகள் ஏம மாதம் 18-ம் 19-ம்திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

கரபந்தாட்ட, வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டிகள் ஜூன் 11-ம் திகதி வவுனியாவில் நடைபெறும். ஆசிரியருக்கும், கனிஷ்ட வித்தியாலயங்களுக்குமான விளையாட்டுப் போட்டிகள் ஜூன் மாதம் 3-ம் திகதி நடைபெறும். ஆசிரியர்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் மார்ச் 23-ல் நடைபெறும்.

யாழ். கனிஷ்ட பாடசாலைகளின் சுவட்டு மைதான மெய்வல்லுனர் போட்டி பங்குனி 23-ம் திகதி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இவற்றுக்கான ஆயத்தங்களைக் காலதாமதமின்றி மேற்கொள்ளுமாறு வடமாநிலக் கல்வி அதிபதி திரு. எஸ். தணிகாசலம் சகல பாடசாலைகளையும் கேட்டுள்ளார்.

## கரபந்தாட்டப் போட்டி

வேலணை, திங்கள்

## நடவடிக்கை எடுக்கவில்லையாம்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவிலிருந்து வவனியாவுக்குப்போய் அங்குள்ள ஒரு நொத்தாரிசிடம் ஓர் உறுதியை வாங்கித் தனது பையில் வைத்துக் கொண்டு வவனியா பஸ் நிலையத்தில் நின்றபோது பஸ் சென்றுவிட்டதாக அறிந்த ஒருவர் [illegible] யில் முல்லைத்தீவுக்குப் போக எண்ணி லொறிக்கு அருகா

# யாழ். அரசாங்க ஊழியர் உதைபந்தாட்ட போட்டிகள்

## 26-ல் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ் அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் வருடாவருடம் அரசாங்க இலாகாக்களிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டி இம்மாதம் 26ம் திகதி யாழ் விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது.

இப் போட்டியில், யாழ் மாவட்டத்திலிருந்து மொத்தம் பத்துஅரசாங்க இலாகா கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. இம்முறை காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையிலிருந்து இரு பிரிவுக் கோஷ்டிகள் இப்போட்டியில் பங்கு பற்றுவது குறிப்பிடத்தக்கது.

இரு பிரிவாக நடாத்தப்படும் இப்போட்டியில் 'ஏ' பிரிவில் பங்கு பற்றும் கோஷ்டிகளின் விபரம் வருமாறு: தபால் கோஷ்டி, சிறைச்சாலைக் கோஷ்டி, மாநகரசபைக் கோஷ்டி, சீமெந்து தொழிற்சாலைக் கோஷ்டி (இரண்டாம் பிரிவு 'பி' பிரிவில் பங்குபற்றும் கோஷ்டிகளின் விபரம் வருமாறு: இராணுவக்கோஷ்டி கடற்படைக்கோஷ்டி, இ போ. ச கோஷ்டி, பொலிஸ் கோஷ்டி சீமெந்து தொழிற்சாலைக் கோஷ்டி (முதற் பிரிவு).

யாழ் விளையாட்டரங்கில் 26ம் திகதி ஆரம்பமாகும் முதல் ஆட்டத்தில் சிறைச்சாலைக் கோஷ்டியும்-மாநகரசபைக்கோஷ்டியும் மோதிக்கொள்ள விருக்கின்றன.

இப் போட்டியில் கடந்த இரு வருடங்களாக தபால் கோஷ்டியே சாம்பியனாக வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இம்முறை சீமெந்து தொழிற்சாலை கோஷ்டி, தபால் கோஷ்டி, பொலிஸ் கோஷ்டி, ஆகியனவுக்கிடையில் கடும் மோதல்கள் ஏற்படலாமென விளையாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (தே.நி)

## அனலைதீவு

## பாலம் பிரிந்து கிடக்கிறது

அனலைதீவு, திங்கள்

கடந்த இருமாதங்களாக உடைந்த நிலையில் உள்ள அனலைதீவு துறைமுகப்பாலத்தினால் பிரயாணம் மேற்கொள்ளும் இப்பகுதி மக்கள் பெரிதும் அவஸ்தைக்குள்ளாகின்றனர். நேற்றுமுன்தினம் அவசரமாகப் பிரயாணம் மேற்கொள்ளவந்த பிரயாணி ஒருவர் பாலத்திலிருந்து கடலில் வீழ்ந்தார் இதனால் அவரது பிரயாணம் தடைப்படவேண்டி ஏற்பட்டது.

பாலம் இரு கூறுகப் பிரிந்திருப்பதன் காரணமாப் மோட்டார் படகுகளைக பாலத்தில் அணைப்பதில் பலத்த சிரமம் ஏற்படுகிறது.

## பிரிவுபசாரம்

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவு தபால் நிலையத்தில் கடந்த பல வருடங்களாக தபால் சேவகராக கடமையாற்றி இளைப்பாறிய திரு. சி. சோமசுந்தரத்திற்குதபாலக ஊழியர்களால் பிரிவுபசார விழா வொன்று நடத்தப்பட்டது.

புங்குடுதீவு தபாலதிபர் திரு. ப. வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சோமசுந்தரத்தின் சேவையைப் பாராட்டி சதானந்தன், பாலசுப்பிரமணியம், சபாரத்தினம், சுப்பிரமணியம், சிவரத்தினம், சண்முகலிங்கம் ஆகியோர் பேசினர்.

## பாஷையூர் உபதபால் நிலையம்

யாழ்ப்பாணம், செவ்.

பாஷையூரில் புதிய உபதபால் நிலையம் ஒன்று வெகு விரைவில் திறக்கப்படவிருக்கின்றது.

இதற்கான உபதபால் நிலைய அதிபர் நியமனத்துக்கு இப்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் 8-ம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்களை வடமாநில அதிகாரிக்கு அனுப்பிவைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி.)

## ரூ 4,000 மேலதிக வருமானம்

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். அராசாங்க ஊழியர் விளையாட்டுச்சங்கத்தினால் நடாத்தப்படும் கரபந்தாட்ட (செற் அப்) சுற்றுப்போட்டி இம்மாத இறுதியில் ஆரம்பமாகவிருக்கிறது.

இம்முறை இச் சுற்றுப்போட்டியை மிகவிரிவான முறையில் நடாத்துவதற்கு மேற்படிச் சங்கம் பல புதிய ஒழுங்குகளைச் செய்யவிருக்

# திருமலை விவசாயிகளுக்கு கடனை திருப்பிச்செலுத்த அவகாசம்

## அரசாங்க அதிபர் தகவல்

திருக்கோணமலை, திங்கள்

"திருமலை மாவட்டத்தில் இவ்வருடம் வெங்காயப் பயிர்ச்செய்கை வீழ்ச்சி அடைந்துள்ளது. வெங்காயப் பயிர்ச்செய்கைக்காக விவசாயக்கடன் பெற்றவர்கள் தமது கடனை அடைப்பதற்கு அவகாசம் கொடுக்கப்படும்."

திருமலை அரசாங்க அதிபர் திரு. சோமபாலகுணதிரா நிருபர்க்களித்த பேட்டியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

வெங்காய உற்பத்தியில் இத்தனைகாலமும் யாழ்ப்பாணமே முன் நிற்கின்றது. யாழ். குடாநாட்டில் 5000 ஏக்கருக்கு மேற்பட வெங்காயப் பயிர்ச்செய்கை தலைமுறை தலைமுறையாக நடைபெற்று வருகின்றது. சென்ற ஒருவருடத்திற்குள் நிலாவெளி, கும்புறுபிட்டிப் பகுதியில் 1000 ஏக்கர் வெங்காயம் நடப்பட்டிருக்கின்றது. இவ்வருடம் அதிக மழை பெய்த காரணத்தினால் திருமலை மாவட்டத்தில் வெங்காயப் பயிர்ச்செய்கையில் 80 வீதம் பழுதடைந்துவிட்டது.

பழுதடைந்த வெங்காயத்தை சீ. டபிள். யூ. ஈ. மூலம்,விற்று விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு வேண்டிய வசதிகளை அரசாங்க அதிபர் செய்திருக்கின்றார்.

அவர் விவசாயிகளுக்கு விட்ட அறிக்கையில், "எடுத்த கடனை முயற்சிசெய்து எல்லோரும் கட்டப்பாருங்கள். வெங்காயப்பயிர் செய்வோர், சிறுகுழிகளை வெட்டி அல்லது கிணறு வெட்டி நீரைத்தேக்கி வெங்காயத்தை செய்யுங்கள் அப்படி முயற்சிசெய்யும் விவசாயிகளுக்கு காலக்கிரமத்தில் குழிகளையும், கிணறுகளையும் சீமெந்துகொண்டு கட்டிக் கொடுப்பதோடு நீர் இறைக்கும் இயந்திரமும் கொடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

# 'தேசிய இளைஞர் சேவையும் அரசாங்க உத்தியோகமே'

## -- உதவிஅரசாங்க அதிபர்

கைதடி, திங்கள்

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவரும் இதே நேரத்தில் அரசாங்கம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தை ஆரமபித்தது நமக் ஒரு வரப்பிரசாதமாகும்.

கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த தேசிய இளைஞர் சேவை மன்றப் பிரசாரக் கூட்டத்தில் தலைமை வகித்து உரைநிகழ்த்திய அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசபிள்ளை, மேற்கண்டவாறு கூறினார்.

திரு. முருகேசம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கிராமசபைகள் கிராம முன்னேற்றச்சங்கங்கள் போன்றன, கிராமங்களில் இருந்தபோதிலும், தேசிய இளைஞர் சேவை மன்றம் மூலந்தான் கிராமங்கள் புத்தொளிபெற வழிபிறக்கும்.

இம்மன்றத்தில் சேரும் இளைஞர்கள் அந்தந்தக் கிராமத்தில் உள்ள வேலைகளுக்கு ஈடுபடுத்தப்படுவார்கள் நாளொன்றுக்கு ரூபா 3 வீதம் சம்பளம் வழங்கப்படும், இதுவும் ஒரு அரசாங்க உத்தியோகம் என்பதை இளைஞர்கள் அறிந்திருக்க வேண்டும்.

பதையும் உங்களுக்கறியத் தருகிறேன் எனவே உங்கள் எதிர்காலத்தின் நன்மையைக் கருதி கைதடிக்கிராம மக்கள் அதிகமாகச் சேர்வதன் மூலம் மற்றக்கிராமங்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கவேண்டும் என்று கூறினார்.

## அண்ணுவுக்கு மட்டும் தடையா?

வெள்ளவத்தை. திங்கள

"இலங்கை எழுத்தாளர்களுக்கு உற்சாகமளிக்க வேண்டும். எமது ஈழத்துக் கலை இலக்கியப் படைப்புக்கள வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதே 'குங்குமத்'தின் நோக்கம்"

இவ்வாறு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற 'குங்குமம்' குதூகல விழாவின்போது திரு கே எஸ். நாதன் குறிப்பிட்டார்.

மட்டக்களப்புக் கவிஞர் திரு காசி ஆனந்தன் பேசுகையில், "ஈழத்து எழுத்தாளர்களவளரவேண்டுமானல் தமிழகத்திலிருந்து இங்கு இறக்குமதியாகும் பத்திரிகைகளைத் தடைசெய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக கடமையாற்றி அண்மையில் இளைப்பாறியுள்ள திரு ஜி.என் இராஜசிங்கத்தைக் கௌரவிக்குமுகமாக இம்மாதம் 24-ம் திகதி மேற்படி பாடசாலையில் ஒருபிரிவுபசார விழாவை நடாத்த பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்கமும் பழையமாணவர் சங்கமும் ஒன்றுகூடி முடிவு செய்திருக்கிறது.

இப்பகுதியில் மின்சாரவசதிகளும் வழங்கப்படவிருக்கின்றன. அன்றைய தினம் நடாத்தவிருக்கும் மின்சார அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உபசபாநாயகர் திரு. மு சிவசிதம்பரம் பிரதம அதிதியாக் கலந்துகொள்ளவிருக்கிறார்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


**ராணி** (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த
**அடிமைப் பெண்**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்· நாகேஷ்; சரோஜாதேவி மற்றும்பலர் நடித்த
**அஞ்சல் பெட்டி 520**

7வது வெற்றி வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
**திருவருட் செல்வர்**
[ஈஸ்ட்மென் கலர்]

**கெப்பிட்டல்** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெம்பிளி** (கண்டி)
நடிகர் திலகம்
★ சிவாஜிகணேசன்
நாட்டியப்பேரொளி
★ பத்மினி
மற்றும் பலர் நடித்து
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்
**தில்லானா மோகனம்பாள்**


டிகள் மார்ச் 23-ல் நடை

## கரபந்தாட்டப் போட்டி

வேலணை, திங்கள்

வேலணை கலைமகள் சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் மேற்படி நிலைய முன்றலில் ஒவ்வொரு போயாவிலும் நடைபெறும் கரபந்தாட்டப்போட்டி கடந்த போயாவன்று நடைபெற்றது. தேர்வுக்கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற இக் கரபந்தாட்டப் போட்டியில் ஒவ்வொரு கோஷ்டியும் தலா 2-1 கோல்களைப் பெற்றன.


**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
**ஒளிவிளக்கு**

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா,போயா 2-30மணி
சிவாஜி—பத்மினி
நடித்த
**பாலாடை**

**மனோகரா**
யாழ்ப்பாணம்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா போயா3காட்சி
வொலிநாணயக்கார, நடித்த
**பிக்பொக்கட்**
(சிங்களம்)

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 630. 930
பிறிப்போயா, போயா2-30 மணி
ஜெய்சங்கர் - விஜயநிர்மலா
நடித்த
**எங்க வீட்டு பெண்**

வல்வெட்டித்துறை
**றஞ்சனா தியேட்டர்**
தினசரி: 6-30, 9-30
ரஞ்சன் - ராஜகுமாரி
நடித்த
**சந்திரலேகா**
4-30க்கு மட்டும்
KARATE KILLERS

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Poya Prepoya 4 Shows
Charlton Heston,
Roddy McDowell
in
PLANET OF THE APES
(adults)


...டு வவனியா பஸ் நிலையத்தில் நின்றபோது பஸ் சென்றுவிட்டதாக அறிந்த ஒருவர் ஒரு லொறியில் முல்லைத்தீவுக்குப்போக எண்ணி லொறிக்கு அருகாமையில் நின்றபோது இ. போ. ச. சாரதியாகவிருந்து தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு சாரதி சம்பந்தப்பட்ட நபரைத்தாக்கி 5ரூபா கேட்டதாகவும், அவர் பணம் இல்லையெனவே அவரின் பையைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும் வவனியாப்பொலிசில் புகார் செய்யப்பட்டது, எனினும் இது சம்பந்தமாகப் பொலிசார் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனத் தெரிகிறது.

...என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி.)

## ரூ. 4,000 மேலதிக வருமானம்

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவு கிராமசபையின் வரவு செலவுத்திட்டம் தலைவர் திரு. கா. மதியாபரணம் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறியது தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வரவு செலவுத் திட்டத்தினுல் இவ்வருடத்தில்கிராம சபைக்கு நாலாயிரத்துக்கு மேல் மேலதிக வருமானமுண்டு.

# இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

தை மாதம் 7-ம் திகதி [20-1-70]

**மேஷம்-** வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**ரிஷபம்-** உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும். பண விவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம். தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

**மிதுனம்-** பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது. அவசரமுடிவின் மூலம் விரோதத்தை தேடிக்கொள்வீர்கள். துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச்செயலில் ஈடுபடுவார்கள்.

**கடகம்-** சொற்சிலம்பம் ஆடுவதன் மூலம் மற்றவர்களைச் சொக்கவைப்பீர்கள். சிலர் தேர்தல் விவகாரங்களில் ஈடுபடலாம் குடும்பத்தில் அமைதிநிலவும். பெரியவர்களுடன் உறவுகள் பெலப்படும்.

**சிம்மம்-** இதயத்தில் எரிமலை குமுறும் உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும். குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்பட்டலாம். ஆணவப் போக்கினுல் மற்றவர்களுடைய வெறுப்பை சம்பாதிக்கநேரிடலாம்,

**கன்னி-** காரியத்தில் வெற்றி கிடைக்கும். கவர்ச்சியான சம்பவங்களுக்கும் இடம் உண்டு. புதிய தொழிலில் அதிக ஈடுபாடு ஏற்படலாம். நண்பர்கள் ஆதரவு தருவார்கள்.

**துலாம்-** இதயத்தில் இனிமை துள்ளும் பகைவர்கள் பணிவர். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. பரந்தநோக்குடன் செயற்படுவதன் மூலம் பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும்.

**விருச்சிகம்-** வேவுகணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் சிக்கலான பிரச்னைகளை இன்று தள்ளிவைப்பது விரும்பத்தக்கது. பெரியவர்களுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம். நிதானம்வேண்டும்.

**தனுசு-** புதிய சூழ்நிலை உங்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும் குடும்ப வாழ்க்கை கற்கண்டுபோல் இனிக்கும்.

**மகரம்-** சூழ்ச்சிவலை பின்னும், அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். சகோதரவழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம்பெறும். கடன்படநேரிடலாம் மன அடக்கம்வேண்டும்.

**கும்பம்-** உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள். பத்திரிகைத் துறையில் தொழில்புரிவோர் பாராட்டுதல்களைப் பெறுவார்கள்.

**மீனம்-** தொழில்மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிசோலப்படலாம். இதன்மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம். பேட்டிகாண்பதற்கு ஏற்றதினம்,

போட்டி இம்மாத இறுதியில் ஆரம்பமாகவிருக்கிறது.

இம்முறை இச் சுற்றுப் போட்டியை மிகவிரிவான முறையில் நடாத்துவதற்கு மேற்படிச் சங்கம் பல புதிய ஒழுங்குகளைச் செய்யவிருக்கின்றது.

அரசாங்க இலாகாக் கோஷ்டிகளிடையே வருடா வருடம் நடாத்தப்பட்டு வந்த இந்தக் கரபந்தாட்டப் போட்டியில் இம்முறை முதல் தடவையாக யாழ். மாவட்டத்திலுள்ள தனிப்பட்ட விளையாட்டுக் கழகங்களும் பங்கு பற்றலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட கழகங்களிடமிருந்து இதுவரை இருபதுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக இச்சங்கக் காரியதரிசி திரு. ஈ. கே. குமரையா தெரிவித்துள்ளார். (தே. நி.)

## மோகனதாஸ் வென்றது

மட்டுவில், திங்கள்

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் உதைபந்தாட்டக் கழக வீரர்களுக்கும், வேம்பிராய் பாரதி விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் பாரதி விளையாட்டுவீரரை 2-1 கோல்களால் தோற்கடித்தனர்.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டிக்கு திரு. கே. தம்பிமுத்து மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## திருமலையில் வள்ளுவர் கழகம்

திருக்கோணமலை, திங்.

திருமலையில் வள்ளுவர் இளைஞர் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது,

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: எஸ். நவரத்தினம், செயலாளர்: இ. விக்கினேஸ்வரமூர்த்தி, பொருளாளர்: இரா. மகேந்திரராஜா, மற்றும் கே. ஸி. கோமஸ்வில்வராஜா, சௌந்திரராஜன், சிவயோகராஜா பரராஜசிங்கம், சிவபாதசுந்தரம், பிரபாகரன், புலேந்திரன் ஆகியோரும் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

...கள் நாளொன்றுக்கு ரூபா 3 வீதம் சம்பளம் வழங்கப்படும், இதுவும் ஒரு அரசாங்க உத்தியோகம் என்பதை இளைஞர்கள் அறிந்திருக்க வேண்டும்.

தபாற்கந்தோர் மூலம் சேமிப்பு முறையும் தேசிய இளைஞர் மன்றத்தில் கடைமையாற்றுகிறுர், என்பதை அத்தாட்சிப்படுத்துவதற்குரிய புகைப்பட அறிமுக அட்டையும் அரசாங்கச் செலவிலேயே இவர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்

வேறு உத்தியோகங்களைத் தேடிப்போகும் பொழுதுகூட இந்த அறிமுக அட்டை, நேர்முகப்பரீட்சையின் பொழுது உங்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். அது மாத்திரமல்ல தேசிய சேவை இளைஞர்கள் மன்றத்திலுள்ளவககளுக்கு உபகாரச் சம்பள மூலம் பிற நாடு சென்று தொழில் நுட்பவிற்பன்னர்களாக பயிற்சி பெறுவதற்கும் அரசாங்கம் வாய்ப்பளிக்கிறதென்

திரு காசி ஆனந்தன் பேசுகையில், "ஈழத்து எழுத்தாளர்களவளரவேண்டுமானுல் தமிழகத்திலிருந்து இங்கு இறக்குமதியாகும் பத்திரிகைகளைத் தடைசெய்ய வேண்டும் என்று சிலர் கூறுகிறுர்கள். இது முற்றிலும் தவருனது. காருக்குறிச்சி அருணுசலத்தைப் பார்த்து ஒரு தெட்சணுமூர்த்தி தோன்றமுடியுமானுல் ஏன் தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளை நாம் ஆதரிக்கக்கூடாது: அவற்றை விரட்டியடிப்பது தேவையற்ற செயலாகும் ஈழத்தில் எம் ஜி ஆரின் திரைப்படங்களைத் தடைசெய்யவேண்டும். அறிஞர் அண்ணுதுரையின் உருவச் சிலையைக் காட்டக்கூடாது என்றெல்லாம் கூச்சலிடுகிறுர்கள். ஏன்? எங்கோ தூரத்திலுள்ள குருஷ்சேவ், கென்னடி, லெனின் ஆகியோரின் சிலைகளையும் படங்களையும் இங்கே காட்டமுடியும் என்றுல் எமது அயல் நாட்டிலுள்ள அமரர் அண்ணுவின் சிலையை ஏன் காட்டக்கூடாது?





®**பேகோன்** தெளி பொருள்

பறக்கும், ஓடும், ஒளிக்கும் வீட்டுப் பூச்சிகளை உடனே அழிக்கும்.
பேகோன்
ஒரு பிரத்தியேக பேயர் தயாரிப்பு.
வாங்கக் கிடைப்பவற்றில் மிகச் சிறந்த பீடைநாசினி.

BAYER

உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி.
இலங்கையில் உருவாக்குவோர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.
P.91128
விநியோகஸ்தர்கள்: கொழும்பு ஏஜன்சீஸ் லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்து தலைநகருக்கருகில் இஸ்ரேல் விமானங்கள் குண்டுவீச்சு

## மேற்காசிய நிலைமை மோசமாகும் அறிகுறி

கெய்ரோ, ஜன 19

**இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் நேற்று ஐக்கிய அரபுக் குடியரசு பிராந்தியத்தில் வெகுதூரம் ஊடுருவி குண்டுகளை வீசின.**

**இஸ்ரேல் ஜெட் விமானங்கள் அரபுக்குடியரசின் தலைநகரான கெய்ரோவுக்கு சுமார் 16 கிலோமீட்டர் தூரம் வரையில் ஊடுருவிச் சென்றுராணுவ நிலைகள் மீது குண்டு வீசியதாக அறிவிக்கப்பட்டது.**

இஸ்ரேல் விமானங்கள் அரபுக்குடியரசுக்குள் வெகு தூரம் வரை ஊடுருவிவந்து தாக்குதல்களை மேற்கொண்டதை அரபுக்குடியரசு அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்தனர்.

இஸ்ரேலியரின் இரண்டு ஜெட் விமானங்கள் வெகு தூரம்வரை ஊடுருவிவந்ததாகவும் அதில் ஒன்றை சுட்டு வீழ்த்தியதாகவும் மற்றது துரத்தியடிக்கப்பட்டதாகவும் எகிப்தியர் அறிவித்தனர்.

இஸ்ரேலிய விமானங்கள் கைவிடப்பட்ட ராணுவ முகாம் ஒன்றின்மீது குண்டு வீசியதாகவும் அவைகளை எகிப்திய விமானங்கள் வழிமறித்து துரத்திவிட்டதாகவும் எகிப்தியர் கூறினார்கள்.

இஸ்ரேலியர் கெய்ரோவுக்கு மிக அருகாமை வரைக்கும் 1967-ம் ஆண்டுக்குப்பின் ஊடுருவிச் சென்றிருப்பது இதுவே முதல் தடவையாகும் என்று கூறப்படுகின்றது.

அந்த சண்டைக்குப் பின்னர் கெய்ரோவில் அபாய சங்குகள் முதல்தடவையாக நேற்று முழங்கியதாகவும் கூறப்படுகின்றது.

இஸ்ரேலியருடனான சண்டைகள் அடுத்த பெரிய கட்டத்தை அடையக்கூடிய அபாயம் தோன்றியிருப்பதாகவும், இது 1967-ம் ஆண்டு சண்டையைவிட பெரிதாகவிருக்கும் என்றும் அநேகமாக இதுவே வெற்றியைத் தீர்மானிக்கும் சண்டையாக அமையலாம் என்றும் எகிப்திய அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

ஜோர்டான் நிலைகள்மீதும் நேற்று இஸ்ரேலியர் தாக்குதல்கள் நடத்தினார்கள். ஜோர்டானில் வடபகுதியில் ஏற்பட்ட ஒரு சண்டையின்போது நான்கு கிராமவாசிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

லெபனானில் அல்பத்தா புரட்சி இயக்கத்தின்தலைவர் புதியராணுவத்தளபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கின்றார். அவர் லெபனான் பிரதமர் திரு. ரஷீத்கராமியையும் சந்தித்துப் பேசவிருப்பதாகத் தெரிகின்றது.

அரசியல் கூட்டத்தில் குழப்பம்

## 400 பேருக்கு காயம் ஒருவர் பலியானர்

கராச்சி, ஜன. 19

டாக்காவில் அரசியல்கட்சி கூட்டமொன்றில் நேற்றுஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார். 400 பேர் வரை காயமடைந்தார்கள். இவர்களில் 30பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. நால்வரின் நிலைமை மோசமாகவிருப்பதாகக் கூறப்பட்டது.

அடுத்த அக்டோபர்மாதம் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்கு ஆயத்தம் செய்யும் முகமாக சமாதியா இஸ்மாலி என்ற கட்சியின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சமாதியா இஸ்மாலி என்ற இந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் வேறொருகட்சியைத் தாக்கிப் பேசிய போதே மோதல் ஏற்பட்டது. அரசியல் கூட்டங்களுக்கிருந்த தடைகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தக்கூட்டம் நடைபெற்றது.

தென்னபிரிக்காவில்

## இன ஒதுக்கல் பைபிளுக்கு விரோதம்

### தேவாலயத் தலைவர்கள் கண்டனம்

ஜோகனர்ஸபேர்ச், ஜன 19

இன ஒதுக்கல் கொள்கை பைபிளுக்கு விரோதமானதால் அதனை எதிர்க்கும்படி தென்னபிரிக்க தேவாலயத் தலைவர்கள் தென்னபிரிக்கர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

71 தேவாலய பாதிரிமார்களும், அதிகாரிகளும்கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள ஒரு விளம்பர அறிக்கையில் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றனர்.

'சண்டேடைம்ஸ்' என்ற விற்பனை மிகுந்த பத்திரிகையில் இந்த விளம்பரம் வெளிவந்தது. கேப்டவுண் அங்கிலிக்கன் சபையின் அர்ச்பிஷப் அவர்களும் இதில் கையெழுத்திட்டிருக்கிறார்.

ஒன்று படுங்கள் என்ற பைபிள் வாக்கியத்துக்கு நேர் விரோதமாக இனஒதுக்கல் கொள்கை இருக்கிறது என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். கடந்தஆண்டில் இவ்வாறு ஒரு எதிர்ப்பு கிளம்பிய பொழுது தென்னபிரிக்க பிரதமர் ஜோன் வொஸ்டர் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். "நிறுத்திக் கொள்ளுங்கள் நீங்கள் அணியும் உடைகள் உங்களைக் காப்பாற்றப் போவதில்லை" என்றுஅவர் தேவாலய தலைவர்களை எச்சரித்திருந்தார்.

# நிவாரண உதவிகள் லேகோஸில் குவிகின்றன

## ஐ. நா. உதவி பற்றி யு தாண்ட் ஆலோசனை

லேகோஸ், ஜன. 19

உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் நிவாரண உதவிகள் நைஜீரிய தலைநகரில் [illegible] 60 டாக்டர்களும் நர்ஸ்மாரும் அனுப்பப்படவிருக்கிறார்கள் ஏற்கனவே பலர் புறப்பட்டுவிட்டார்கள்.

[illegible]

பியாப்ரா மக்களுக்கு உலகநாடுகள் பலவும் உதவி செய்ய முன்வரவேண்டும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் [illegible]

கி.ஜெர்மனி

## ரூ. 40 ஆயிரம் நன்கொடை

பொலன்னறுவை, ஜன. 19

இலங்கைப் பிரதமர் திரு. [illegible] சேனநாயகாவுக்கு [illegible]

சபரிமலையில்

## காட்டுயானை மிதித்து 2பேர் பலி

கம்பம், ஜன. 19

சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு போன பக்தர்கள் 2 பேரை, காட்டு யானை [illegible]

## வேலணைச் செய்திகள்

— க. அம்பிகாபதி

"தேசிய அரசாங்கத்தை உருவாக்கிய கட்சிகளில் தமிழரசைத் தவிர்ந்த எல்லாக் கட்சிகளுமே ஐக்கியதேசிய கட்சியுடன் இரண்டறக் கலந்துவிட்டன" என சுருவில் ச. ச. நிலைய மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் சுருவில் கிளை அமைப்புக் கூட்டத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி. குறிப்பிட்டார். திரு. வி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் சு. சிவசம்பு, பாலசுப்பிரமணியம், க. கணேசன் ஆகியோரும் பேசினர்.

0 0 0

### ஆங்கில ஆசிரியர்கள்

இம்மாதம் 16-ந் திகதி முதல் ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் சில பாடசாலைகளுக்கு ஆங்கில ஆசிரியர்கள் தேவையென்று பெற்றோர் சங்கங்கள் யாழ். கல்வி அதிகாரியைத் தந்தி மூலம் கேட்டுள்ளன.

0 0 0

### ச. ச. நிலைய சமாஜத்தின் பங்கு

தேசிய இளைஞர் சபை ஒன்று ஆரம்பிப்பது பற்றி வேலணை ச. ச. நிலையங்களின் சமாஜம் தீர்மானித்துள்ளது. நிலைய உறுப்பினர் அடங்கிய பொதுக்கூட்டத்தில் இதுபற்றி முடிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. வேலணை சி. ச. கட்டிடத்தில் தலைவர் திரு. சி. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற சனசமூக நிலைய சமாச நிர்வாக சபைக் கூட்டத்தில் உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டங்கள் வேலணையில் எவ்வாறு நிகழ்த்தப்படவேண்டும் என்று ஓர் அறிக்கைத் தயாரித்து கி. ச. தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

வேலணை கி. ச. பகுதியிலுள்ள 16 சனசமூகநிலையங்களும் 3 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தினங்களிலும் நிகழவேண்

அறிஞர் அண்ணா

# சேவையே மூச்சாக கொண்டு உழைத்தார்

## தமிழ் நாடு கவர்னர் நினைவஞ்சலி

சென்னை, ஜன. 19

காலஞ்சென்ற அறிஞர் அண்ணாதுரை அவர்கள் சேவையையே தம்முயிர்மூச்சாகக் கொண்டு இருந்தார் என்றுதமிழ்நாடுகவர்னர்சர்தார் உஜ்ஜர்சிங் கூறினார்.

சென்னை தண்டையார் பேட்டையில் ஒரு ஸ்தாபனத்தில் காலஞ்சென்ற அறிஞர் அண்ணாவின் உருவப் படம் ஒன்றை கவர்னர் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார். அவர் பேசியதாவது:-

"அண்ணா முதல்-அமைச்சர் பொறுப்பை ஏற்றபிறகு அவருடன்நெருங்கிப்பழகும் வாய்ப்புஎனக்கு கிடைத்தது அவர் பிரபலமான மக்கள் தலைவர்.

சிறந்த அறிவாளி ஜனநாயகவாதி, பேச்சாளர் எழுத்தாளர், அவருக்குக்கோபமே வராது யாருடைய மனமும் புண்படும்படி பேசமாட்டார்.

எந்தவித குறிப்பும் இல்லாமல், மக்கள் உணர்ச்சி வசப்படும்படி பேசுவார். சேவையை தன் உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார். எந்தவிஷயத்திலும்அவசரப்பட்டு முடிவு எடுக்கமாட்டார். கூட்டுமனப்பான்மையுடன் நடந்துகொள்வார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை தன்கொள்கையாக கொண்டு ஏழை மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டார். நம் நாட்டுக்கு நம்கடமையை செய்ய வேண்டுமானல் அண்ணா கொள்கையை பின்பற்றி நடக்கவேண்டும்."

# 'எழுத்தாளர், கவிஞர்களுக்கு ரஷ்யாவில் விசேஷ சலுகை'

— உடுவில் எம். பி.

யாழ்ப்பாணம், செவ்வாய

"தமிழ்த் தொண்டு செய்தவர்கள் இந்த நாட்டில் வாழ்ந்துவரும் தமிழ்பேசும் மக்களின் மூதாதையர்கள் தான். அண்மையில் சுவாமி தனிநாயகம்அடிகள் தமிழை அகில உலக மொழியாக்க எடுத்துவரும் பெருமுயற்சியை நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம். பண்டைக் காலத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் தீந்தமிழ் இன்பம் கண்ட பெரியாருள் ஒருவராவர். இப்படியே இந்து முஸ்லிம் மக்களிடையே இருப்பவர்கள் செய்துள்ள சேவை எடுத்துச்சொல்ல இயலாதவை"

நவாலியில் நடைபெற்ற கவிஞர் யோசேப்புவை பாராட்டுமுகமாக நடைபெற்ற கூட்டமொன்றில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்: அவர் மேலும் கூறியதாவது:-

இன்றுள்ள நிலையில் கவிஞர்கள், எழுத்தாளர்கள் ரஷ்ய நாட்டிலே பெற்றுவரும் விசேஷ சலுகைகள் இலங்கையைப் பொறுத்தவரையில் இல்லையென்றே சொல்லிவிடலாம். இங்குள்ள எழுத்தாளர்கள் பெரும்பாலானவர்கள் வறுமைப்பிணியால் வாடிவதங்கி வருகிறார்கள்.

திரு. ஆசீர்வாதம்ஹென்றி பேசுகையில், எமது மொழியைப் பழைய நாட்களில் முடியுடை மூவேந்தர்கள் அரியணையில் அமர்த்தி, உயிரினும் பெரிதாக ஓம்பி வளர்த்துவந்தனர். இன்றைக்கு எமது மொழி அல்லல்துடைக்க எமது இனம் கங்கணம் கட்டவேண்டும் என்றார்.

வேறு பலரும் பேசினர்.

## எதிரிகள் குற்றவாளிகள்

வல்வெட்டித்துறை, திங்கள்

பொலிகண்டியைச் சேர்ந்த ஐ புனிதர், தங்கராசா, த சிவசுப்பிரமணியம் ஆகிய மூவரும் அதே இடத்தைச் சேர்ந்த ஆனந்தமயில் என்பவருடைய வீட்டிற்குள் கடந்த வருடம் ஆவணி மாதம் 18ம் திகதி இரவு புகுந்து ரூபா 2100 பெறுமதியான மீன்பிடி உபகரணங்களைக் களவாடியதாக வல்வெட்டித்துறைப் பொலி [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யுதாண்ட் ஆலோசனை

லேகோஸ், ஜன. 19

உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் நிவாரண உதவிகள் நைஜீரிய தலைநகரில் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன.

நேற்று பிரிட்டனிலிருந்து நான்கு விமானங்கள் நிவாரணஉதவிக்கான பொதிகளுடன் லேகோஸ் புறப்பட்டன.

ஒரு சுவிஸ் விமானமும் நிவாரணப்பொருட்களுடன் நைஜீரியாவுக்குப் புறப்பட்டது. இந்த விமானங்களில் உணவுப் பொருட்களும், மருந்து வகைகளும் உள்ளன பிரிட்டனிலிருந்து பியாப்ராவில் கடமைபுரிவதற்காக 60 டாக்டர்களும் நர்ஸ்மாரும் அனுப்பப்படவிருக்கிறார்கள் ஏற்கனவே பலர் புறப்பட்டுவிட்டார்கள்.

உள்நாட்டுக் கலகம் ஆரம்பித்த காலம்தொட்டு லேகோஸில் நடைமுறையிலிருந்து வந்த இருட்டடிப்பு நேற்று நீக்கப்பெற்றது.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு வில்சன் நைஜீரிய நிலைமைபற்றி இன்று பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் தகவல் கொடுக்கவிருக்கிறார். நைஜீரியாவுக்கு பிரிட்டன் அளிக்கும் நிவாரண உதவிகள் பற்றி அவர் விளக்கிக் கூறுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பியாப்ரா மக்களுக்கு உலகநாடுகள் பலவும் உதவி செய்ய முன்வரவேண்டும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸ் கருத்துவெளியிட்டிருக்கிறார் லேகோஸுக்கு விஜயம் செய்துள்ள ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் நிவாரண உதவிகள் வந்துசேரும் முக்கிய துறைமுகம் ஒன்றுக்கு இன்று போகவிருக்கிறார். ஐ. நா. விசேஷ சபைகள் மூலம் நைஜீரியாவுக்கு உதவிகள் கிடைப்பதுபற்றி யுதாண்ட் ஜெனரல் கோவானுடனும் மற்ற தலைவர்களுடனும் நேற்று ஆலோசனைகள் நடத்தினர்.

# காங்கிரஸ் தேர்தல்சின்னம்: 23-ல் பூர்வாங்க விசாரணை

புதுடில்லி, ஜன. 19

இந்திய தேசிய காங்கிரஸின் தேர்தல் சின்னத்தை ஒதுக்குவதைப் பற்றிய பூர்வாங்க விசாரணை ஜனவரி 23-ல் நடக்கும் இதில் ஆஜராகுமாறு பழையகாங்கிரஸ் காரியதரிசி திரு. சாதிக் அலி போட்டி காங்கிரஸ் காரியதரிசி திரு. பகுகுண இருவருக்கும் தேர்தல் கமிஷன் கடிதங்கள் அனுப்பி இருக்கிறது.

அவரவர் களுடையபாத்தியதை நிலைநாட்டுவதற்கு அவசியமான எல்லா சாட்சியங்களையும் சமர்ப்பிப்பதற்கு முழு வாய்ப்பும் இருதரப்பினருக்கும் அளிக்கப்படும் என்று பிரதம தேர்தல் கமிஷனர் திரு. சென்வர்மா உறுதி கூறினர்.

ஒரு முடிவுக்கு வருவதற்கு முன், ஆஜர்படுத்தப்படும் எல்லாச் சாட்சியங்களையும் தேர்தல் கமிஷன் பரிசீலிக்குமென்றும் உறுதி கூறினர்.

இரட்டைக் காளை மாட்டு சின்னம் தங்களுக்கே உரியது என்றும் பாத்தியதை கொண்டாடி இருகாங்கிரஸ் கட்சிகளின் காரியதரிசிகளும் கடிதங்களை அனுப்பியதையடுத்துதேர்தல் கமிஷன் பூர்வாங்க விசாரணைக்கான தேதியை நிர்ணயித்தது.

இந்திய தேசிய காங்கிரசின் தேர்தல் சின்னம் சம்பந்தமாக தேர்தல் கமிஷன் சட்டப்படி எந்தவிதமான விசாரணையையும் நடத்த முடியாது என்று பழைய காங்கிரஸ் பொதுக்காரியதரிசி சாதிக் அலி தேர்தல் கமிஷனருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருக்கிறார்.

சி சுப்பிரமணியம் பிரதிபலிக்கும் அமைப்பு காங்கிரசிலிந்து பிரிந்து சென்ற கோஷ்டியோ அல்லது காங்கிரசுக்கு போட்டியான கோஷ்டியோ என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அவர்கள் இந்திய தேசிய காங்கிரசிடமிருந்து சட்டப்படி வெளியேற்றப்பட்டவர்கள் அல்லது காங்கிரசின் உறுப்பினர்களாக இல்லாதவர்கள். தாங்கள் வெளியேற்றப்பட்டதையோ அல்லது உறுப்பினர்களாக இல்லாததையோ எவ்விதமான ஆட்சேபமும் இல்லாமல் அவர்கள் ஒப்புக்கொண்டு விட்டிருக்கிறார்கள். இந்தநிலையில் காங்கிரசின் பெயரை அவர்கள் உபயோகிக்க முடியாது என்று சாதீக் அலி கூறியிருக்கிறார்.

புதுடில்லி, விண்ட்ஸர் பிளேஸ் 15-ம்எண்கொண்ட இடத்தில் இந்திய தேசிய காங்கிரசுக்கு முகாம் அலுவலகம் எதுவும் கிடையாது என்றும் சாதீக் அலி கூறியிருக்கிறார்.

இரட்டைக்காளை தேர்தல் சின்னத்தை தங்களுக்கு அளிக்கவேண்டுமென்று சி. சுப்பிரமணியம்போட்டிகாங்கிரஸ் இடைக்கால தலைவராக இருந்தபோது பிரதம தேர்தல்கமிஷனருக்கு எழுதியிருந்தார். அதுபற்றிமுடிவு செய்வதற்கு முன்பாக பழைய காங்கிரசின் அபிப்பிராயத்தைத் தேர்தல் கமிஷனர் கேட்டிருந்தார். அதற்கு பதிலளிக்கும்வகையில், சாதீக்அலி கடிதம் எழுதியிருக்கிறார்.

தங்களுடையதுதாய்ஸ்தாபனம் என்றும், இதிலிருந்து சில உறுப்பினர்கள் வெளியேறினர்கள்என்றும்எனவே தேர்தல் சின்னம் தங்களிடமே தொடர்ந்து இருக்கிறது என்றும் சாதீக்அலி தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் கட்சிகளில் பிளவு ஏற்பட்டபோது உருவான மரபை உதாரணமாகக்காட்டி தங்களுடையநிலை சரியானதே என்று சாதீக் அலி கூறியிருக்கிறார்.

ஓர் அரசியல் கட்சிக்குபல விதமான பரீட்சைகளுக்கு பிறகு தேர்தல் கமிஷன் அங்கீகாரம் அளித்துவிட்டால் அதற்குபின்னல் அந்த அங்கீகாரத்தை ரத்துசெய்ய தேர்தல் கமிஷனுக்கு சட்டபூர்வமான அதிகாரம் எதுவும் கிடையாது என்று ஓய்வு பெற்ற ஐ. ஸி. எஸ். அதிகாரி ஆர். பி. கபூர் ஓர் அறிக்கையில் கூறினர்.

'அங்கீகாரம் பெற்ற கட்சிக்கேதேர்தல் சின்னம்உரித்தானதாகும். அங்கீகாரம் பெற்றகட்சியின் அங்கீகாரத்தை ரத்துச்செய்ய முடியாது என்ற நிலையில், சின்னத்தை அதனிடமிருந்து பறிக்கமுடியாது என்பதும் நிச்சயம்' என்று அவர் கூறினர்.

## ரூ 40 ஆயிரம் நன்கொடை

பெர்லின். ஜன. 19

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுப் பிரதமர் திரு விலிஸ் டொப் அனுப்பியுள்ள ஒரு தந்தியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனதரசாங்கத்தினதும் ஜெர்மன் மக்களினதும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

வெள்ளம் பெரும் தேசத்தை ஏற்படுத்தியிருப்பதால், நிவாரணவேலைகளுக்காக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் செஞ்சிலுவைச் சங்கமும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தொழிற்சங்க சம்மேளனமும் 100,000 மார்க் சுமார் ரூபா 140,000 நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

— —

## இரு கோஷ்டிக்கும் ஒரே தலைவர்

கோழிக்கோடு, ஜன. 19

கேரளத்தில் மாலபுரம் ஜில்லா காங்கிரஸ் இரண்டாக பிளவு பட்ட போதிலும் இரு கோஷ்டிகளுக்கும் ஒரே நபர்தான் தலைவராக இருக்கிறார். இரு கோஷ்டிகளும் ஆர்யதன் முசமதுதான் தலைவர் என்று கூறிக் கொள்கின்றன.

இடதுசாரி கம்யூனிஸ்டு தலைவர் ஒருவர் மரணம் சம்பந்தமாக முகம்மது மீது விசாரணை நடந்து வருகின்றது.

கட்சி பிளவு படுவதற்கு முன்னதாக ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவராக முகம்மது தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பழைய காங்கிரஸின் ஜில்லா கமிட்டி பொதுக்குழுக் கூட்டம் சமீபத்தில் நடந்தது. முகம்மது தான் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என்று பொதுக் குழு அறிவித்தது. போட்டி காங்கிரஸை ஆதரிக்கும் உபதலைவர் மோகன்கிருஷ்ணனை, பொதுக்குழு கட்சியிலிருந்து நீக்கிவிட்டு அப் பதவிக்கு வேறொருவரைதேர்ந்தெடுத்தது.

போட்டி காங்கிரஸின் ஜில்லாக் கமிட்டிக் கூட்டம் நடந்தபோது கமிட்டி நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனல் முகமது ஜில்லா கமிட்டித் தலைவர் என்று அக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

முகமது போட்டி காங்கிரஸின் தீவிர ஆதரவாளர் என்று அக் கோஷ்டியினர் கூறுகிறார்கள்.

## மிதித்து 2பேர் ப[illegible]

கம்பம், ஜன. 19

சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு போன பக்தர்கள் 2 பேரை, காட்டு யானை மிதித்துக்கொன்றது.

தமிழ்நாட்டில் இருந்து சபரிமலைக்கு புறப்பட்ட பக்த கோஷ்டி ஒன்று சுரங்க முத்திமலையில் இருந்து பனியேற்று பாதைக்கு போய்க் கொண்டிருந்தபோது, 2 பேர் தனியாக காட்டுப் பாதையில் பிரிந்துசென்று விட்டனர் இரவு நேரத்தில் அங்கு திரிந்துகொண்டு இருந்த காட்டு யானை ஒன்று அவர்களை தாக்கி மிதித்து கொன்றது.

மறுநாள் காலையில் இது பற்றிய தகவல்கிடைத்ததும் பிணத்தைக்கைப்பற்றிஅவர்களுடைய அங்க அடையாளங்கள் பற்றி ஒலி பெருக்கி மூலம் அறிவித்தார்கள். என்றாலும் அவர்கள் யார் என்ற விவரம் தெரியவில்லை.

அய்யப்பன் கோவில் பதினெட்டாம் படியில் ஏறச் செல்லும் போது ஒரு பக்தர் "திடீர்" என்று மயங்கி விழுந்தார். அவரை அய்யப்ப சேவா சங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய்ச்சேர்த்தார்கள். அங்கு அவர் பரிதாபமாக இறந்துபோனர்.

— —

## எதிரிகள் விடுதலை

மட்டுவில், திங்கள்

ஆமைகளைப் புரட்டிலொறியில் போட்டுக் கொண்டு போனதாக பிராணவதைக் குற்றஞ் சாட்டி வழக்குத் தாக்கல் செய்தார். ஆனையிறவு பரிசோதனை முகாம் அதிகாரி திரு. அங்குனவலே.

இந்த வழக்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குருசுப்பிள்ளை, அகஸ்டின், மடத்தின், காணிக்கைராசா, சின்னையா ஆகியோர்மீது ஆனையிறவு பரிசோதனை முகாம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. அங்குனவலே உயிர் உவாதைக் குற்றம் சாட்டியிருந்தார்.

இதில் 69 ஆமைகளை புத்தளத்தைச்சேர்ந்த கற்பிட்டியிலிருந்து இவர்கள்யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்திருந்தார்களாம்.

இந்த வழக்கை சாவகச்சேரி பதில் மாஜிஸ்திரேட் திரு. கே. ஞானச்சந்திரன் விசாரணை செய்தார். எதிரிகள் சார்பில் திரு ஜி ஜி பொன்னம்பலம் கியூ ஸி ஆஜரானர். விசாரணை முடிவில்எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

டம் சமர்ப்பிக்கப்பட்டது.

வேலணை கி. ச. பகுதியிலுள்ள 16 சனசமூகநிலையங்களும் 3 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தினங்களிலும் நிகழவேண்டிய விஷயங்களுக்கு ஒவ்வொரு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் கோவில்களில் விசேஷ பூசைகள் நடத்தல், பொது இடங்களைச் சுத்திகரிக்கும் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளல், தனிப்பட்டவர்களைக்கொண்டு பஸ் நிறுத்துமிடங்கள் கட்டுவித்தல், பாடசாலைகளின் உதவியுடன் கலை கலாச்சார இலக்கிய நிகழ்ச்சிகள் நிகழ்த்துதல் ஆகியன விழாவின் அம்சங்களாகத் தீர்மானிக்கப்பட்டன.

0 0 0

### முதியவர் முன்மாதிரி

மண்கும்பாள் பள்ளிவாசலுக்கு அருகே ஒரு தீர்த்தக் கேணியைத் தமது தனித்த முயற்சியால் உருவாக்கிவரும் வேலணையைச் சேர்ந்த திரு. வேலுவைத்திலிங்கம் தொடர்ந்து தனது பணியை மேற்கொண்டு வருகிறார். சில தினங்களில் கேணியின் கட்டுமான வேலைகள் பூர்த்தியாகவுள்ளன.

0 0 0

### தீர்மானம்

மழை காரணத்தால் பிற்போடப்பட்ட விளையாட்டுப் போட்டியை அடுத்த மாத இறுதிக்குள் நிகழ்த்துவதென்றும் பங்குனி மாதத்தில் தாச்சி இறுதிப் போட்டிக்கு முந்திய போட்டியை சரவணையிலும் இறுதிப் போட்டியை வேலணையிலும் நிகழ்துவதெனவும் வேலணை கி. ச தலைவர் க. சதாசிவம் தலைமையில் வேலணை மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தீவுப் பகுதி விளையாட்டுக்கழக நிர்வாககசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் முடிவடைந்தபின் விளையாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி தலைமையில் பரிசு வழங்குவதென்றும் பரிசளிப்பு விழாவை ஊர்காவற்றுறையில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## இலவசப் படக்காட்சி

யாழ்ப்பாணம், செவ்வாய்

திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் நாளை மாலை 7 மணியளவில் இலவசப் படக்காட்சி சுகாதாரப் பகுதியினரால் காட்டப்படவுள்ளது.

ரஷ்ய நாட்டிலே பெற்றுவரும் விசேஷ சலுகைகள் இலங்கையைப் பொறுத்தவரையில் இல்லையென்றே சொல்லிவிடலாம். இங்

## 'விவசாயத்தில் ஈடுபடுங்கள்'

எம்.பி.

மாவிட்டபுரம், திங்கள்

'எமது நாட்டிலிருந்து வேலையில்லா திண்டாட்டம் ஒழியவேண்டுமானல் இளைஞர்கள் யாவரும் விவசாயத்தில் ஈடுபடவேண்டும். ஆகலால் இந்த உழவர் திருநாளன்று இளைஞர்கள் யாவரும் விவசாயத்தில் இறங்குவோமென உறுதிபூணவேண்டும்'.

இவ்வாறு உடுவில் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி தர்மலிங்கம் சுன்னுகம் கதிரமலைச் சிவன்கோவில் முன்றலில் நடந்த உழவர் விழாவில் கலந்துரையாற்றுகையில் கூறினர்.

## வர்த்தமானி காலதாமதமாகி வருகிறது

உடுப்பிட்டி, திங்கள்

வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்படும் அரசாங்க வர்த்தமானி காலதாமதமாகியேகிடைப்பதால் தமிழ் வாலிபர்கள்பலவேலைவாய்ப்புகளை இழக்கவேண்டிய துரதிருஷ்டநிலை தோன்றியுள்ளது.

தற்போது அரசாங்கதிணைகளங்களில் காலிஸ்தானங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதிக்கு முன்தினம் அல்லது முடிவுதிகதிக்குப் பின்னரே பெரும்பாலும் வர்த்தமானி அனுப்பிவைக்கப்படுகின்றது.

—

திருநெல்வேலி கலாமன்ற

## இலவச வகுப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

திருநெல்வேலி கலாமன்றத்தில் வரும் தைப்பூசத்தன்று (22-1-70) மாலைநேர இலவச வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பதினன்கு வருடங்களுக்கு முன்னர் இதே போன்ற இலவசவகுப்புகள் இங்கு நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இலவச வகுப்பு ஆரம்ப விழா திரு. வி. கே. கந்தையா தலைமையில் நடைபெறும். ஆசிரியர் திரு. எஸ். சிவஞானசுந்தரம் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

கடந்த வருடம் ஆவணி மாதம் 18ம் திகதி இரவு புகுந்து ரூபா 2100 பெறுமதியான மீன்பிடி உபகரணங்களைக் களவாடியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகள் மூவரையும் குற்றவாளியாகக் கண்டு கைஅடையாளம் எடுக்கும்படியும், றிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 26ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## தமிழரசு வா. மு. கைதடிக் கிளை

கைதடி, திங்கள்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணிக் கைதடிக்கிளை, கைதடி ச ச நிலைய மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சாவகச்சேரி எம் பி தலைமை வகித்தார். உத்தியோகத்தர் விபரம் வருமாறு:

போஷகர்கள்: திருவாளர்கள் ஏ சின்னையா, கே வேலுப்பிள்ளை, என் பாண்டியன், எஸ் சிதம்பரப்பிள்ளை தலைவர் ரி முத்துக்குமாரசாமி, உபதலைவர்கள் திருவாளர்கள் வி ஆறுமுகநாதன், வி செல்லன், எஸ் யோகேஸ்வரன். காரியதரிசி திரு கே தேவாசா, உபகாரியதரிசி திரு கே சின்னத்தம்பி, பொருளாளர் திரு. எஸ் சின்னத்துரை.

## "இசைகள் பலவிதம் நோக்கு ஒன்று"

வெள்ளவத்தை, திங்கள்

கர்நாடக இசைக்கலைஞர்கள் இன்று மெல்லிசையைப் பாட மறுக்கின்றார்கள. கர்நாடக இசை வேறு, மெல்லிசை வேறு, மேல்நாட்டு இசை வேறு. ஆனல் எல்லாம் மக்களுக்கு இன்பம் பயக்கின்றன. ஒவ்வொரு சாராருக்கு ஒவ்வொருவகை இசை பிடிக்கின்றது. அதற்காக ஒருசாராரை இன்னெரு சாரார் புறக்கணிக்கக்கூடாது.

இவ்வாறு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியொன்றில் உரை நிகழ்த்திய திருகோணமலை கோணேஸ்-பரமேஸ் இசைக் கோஷ்டியைச் சேர்ந்த திரு. கோணேஸ் பேசுகையில்கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனம்போனபோக்கில் பணத்தைச் செலவழிப்பதனுல் தீமையும் வறுமையும் பெருகுகின்றன; அதாவது பணமே விஷத்திக்கு சமமாய் மாறிவிடுகிறது. ஆனுல் அதே பணத்தின் போக்கு வரையறுக்கப்படுமாயின் அணையுள்ள ஆற்றைப்போல் நன்மையையே விளேவிக்கும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம்
7-ந் திகதி (20-1-70)


## பதிவுப் பிரஜைகள்

பதிவுப் பிரஜைகளுக்குப் பல துறைகளிலும் பாகுபாடு காட்டப்படுவதாகப் புகார் கூறப்படுகிறதென்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. பாகுபாடு காட்டப்படுகிறதென்பது புதிய செய்தியல்ல, இதற்கு முன்னரே பதிவுப் பிரஜைகள் என்ற புதியதோர் இனத்தை உருவாக்கக் கூடாதுஎன்றும் அப்படியானதோர்நிலே ஏற்பட்டுவருவதற்கான சூழ்நிலே ஏற்படுத்தப்பட்டுவருவதாகவும் பலமாதங்களுக்கு முன்னரே இப்பத்தியில் நாம் குறிப்பிட்டிருந்தோம்.

பதிவுப் பிரஜைகளின் நிலேயைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது. பதிவுப்பிரஜைகளின் சார்பாக ஒரு தூதுக்குழு அரசாங்கத் தலேவர்களேச் சந்தித்து நிவாரணம் கோரவிருப்பதாகவும் அதே செய்தி கூறுகிறது. இதுசெய்யவேண்டிய முயற்சி தானென்ருலும் இந்தப்பாகுபாட்டுக்கு இடம்வைக்காத முறையில் காரியங்கள் நடைபெற்றுவருகின்றனவாவென்பதைப் பதிவுப் பிரஜைகளும் அவர்களின் நல்வாழ்வில்அக்கறை கொண்டுள்ள ஸ்தாபனங்களும் தலேவர்களும் கவனித்திருக்கவேண்டும். முன்பு தான் தவறிழைக்கப்பட்டிருந்தாலும்கூட இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது இந்த முக்கிய விஷயம் பற்றி இங்குள்ள தலேவர்கள் சுட்டிக்காட்டியிருந்தால் இப்போதே இனிப்பதிவுப் பிரஜைகளாகவருபவர்களுக்கோ பாகுபாடு காட்டக்கூடியநிலே ஏற்பட்டிருக்காது.

இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டவர்கள் அவர்கள் எந்த நாட்டவராயினும் இலங்கைப் பிரஜைகளெனவே பதிவு செய்யப்பட்டு அவர்கள் இதர இலங்கைப் பிரஜைகளுக்குரிய சகல உரிமைகளேயும் அனுபவிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

வம்சாவழி இலங்கைப் பிரஜைகள், பதிவுப் பிரஜைகள், இலங்கைத் தமிழரா? இந்தியத் தமிழரா என்ற கேள்விகள் பாடசாலேயில் பிள்ளேகளே அனுமதிக்கும்போதே கேட்சப்படுகிறது. இது எந்தவகையிலும் இலங்கையர் என்ற மனப்பான்மையையோ தேசிய ஒருமைப்பாட்டையோ ஏற்படுத்த உதவமாட்டாது.

ஒரு மொழி ஓர் இனம் என்று பேசிக்கொள்ளப்படும் நமது நாட்டில் புதியதோர் இனத்தை பதிவுப்பிரஜைகள் என்ற இனத்தை உருவாக்குவது எந்தவகையிலும் நாட்டுக்கு நன்மை பயக்கமாட்டாது

இலங்கைப் பிரஜைகள், இலங்கை வம்சாவழிப்பிரஜைகள், பதிவுப் பிரஜைகள் என்று பாகுபாடுகாட்டுவதால் இலங்கையின் தேசிய ஒற்றுமைசீர்குலேந்து நாடுபிளவுபடுவதற்கே வழிவகுக்கும். இலங்கை வம்சாவழிப் பிரஜைகளுக்கு ஒரு சங்கம், அவர்களேச் சார்ந்த வர்த்தகர்களுக்கு ஒருசங்கம், என்று வரும்போதே இதுபற்றிக் கவனிக்கப்பட்டிருக்கவேண்டும்.

இப்பொழுதும்கூடஎல்லோரையும் சமமாக நடத்துவதற்காக சட்ட ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் நடவடிக்கைகள் எடுத்து தேசீய ஒற்றுமையைப் பாதுகாக்கமுடியும்.

## கடற்றொழிலுக்கும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருக்கு எடுத்துக் காட்டினுர்.

பூனகரி மகாதேவாலயம் கட்டிட வேலே பற்றி இங்கு ...

... தனேயோ லடசம் செலவு செய்யும் தேசிய அரசாங்கம் மீன்பிடிக்கு உதவி செய்யாதிருப்பது கவலேக்குரியதென்றும், மீன்பிடியும்கூட ...

# கைத்தறித்துறையின் மகத்துவம்

## வேலேவாய்ப்புக்களே கொடுக்கும் பெரிய சாதனம்

[பெரிய பெரிய துணி ஆலேகளும், மின் தறிகளும் நிறுவப்பட, நிறுவப்பட, கைத்தறியாளர்களே எதிர்நோக்கும் பிரச்னேகளும் மேலும், மேலும் உக்கிரமாகிக்கொண்டே போகின்றன.

இந்தச சூழ்நிலேயில் கைத்தறியாளர்களின் பிரசனேகள் என்ன? அவை ஏற்படக் காரணங்கள் என்ன? கைத்தறியாளர்களின் எதிர்காலப் பிரசனேகள் என்ன? அவற்றை எங்ஙனம் தீர்க்க முயலலாம்? என்பன பற்றி இந்தக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.]

நமது ஆட்சிமன்றத்திலே ஒருமுறை திருமதி சிவகாமி ஒபயசேகரா, கைத்தறியாளர்களே எதிர்காலத்தில் எதிர்நோக்கும் பல பிரச்னேகளே முன்வைத்துப்பேசி, புதிய, பெரிய, மிகக்கூடுதலான துணி ஆலேகள் மேலும் மேலும் நிறுவுவதால், கைத்தறியாளர்கள் நசுக்கப்பட்டு வேலேயில்லாத் திண்டாட்டத்தில் சிக்கித்தவிக்கிருர்கள் என்று கைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு திரு. பிலிப் குணவர்த்தனுவிடம் முறையிட்டார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் கைத்தறியாளர்களின் துயர் துடைக்க, அரசாங்கம்மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளே எல்லாம் விளக்கிவிட்டு, எத்தனே பெரிய மில்கள் வந்தாலும் கைத்தறித்துணிகளுக்கு என்றுமே தனிமதிப்பு இருக்கத்தான் செய்யும் என்பதை வலியுறுத்த, 'பெரிய பெரிய ஓட்டல்கள் வந்துவிட்டதால் வீட்டுச்சமயலும்சாப்பாடும் இல்லாமலாபோய்விட்டது! என்று பெண்ணுப்பிறந்த மீரிகம எம்.பி.யை மடக்கிவிட்டார்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும் மாண்புமிகு கைத்தொழில் அமைச்சரின் வாக்குச்சாதுர்யத்துக்கு இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாக இருந்தாலும், அதே நேரத்தில். நமதுநாட்டுக் கைத்தறியாளர்களின் நிலேயையும் சற்றே விளக்குவதாகத்தான் அமைந்திருக்கிறது.

### சுமார் 1 லட்சம் கைத்தறிகள்

கைத்தறித்துறை இப்பொழுது, கிராம வளர்ச்சி, குடிசைக் கைத்தொழில்கள் அதிபரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறது. இவரிடமுள்ள தகவல்களின்படி 1969- ஏப்ரல் மாதம் வரைக்கும் 79,300 பதிவு செய்யப்பட்ட கைத்தறிச் சாலேகள் நாட்டில்இயங்குவதாகவும், 1972க்கு முன் மேலும் 10,700 கைத்தறிச் சாலேகள் பதிவுசெய்யப்படுமெனவும் அறியப்படுகிறது. இந்த அடிப்படையில்1972ம் ஆண்டில் இலங்கையில் மொத்தம் 90,000 பதிவு செய்யப்பட்ட கைத்தறிகள் நெசவு தொழிலில் ஈடுபட் ...

... சுமார் 2 கோடியே 50 லட்சம் யார்களாக இருக்கலாம் என்று உத்தேசிக்க இடமுண்டு. உத்தரவாத விலேயின்கீழ் கைத்தறிச் சாரங்கள் வாங்கப்பட்டபோது மாதாந்தம் சுமார் 300,000 சாரங்கள் வழங்கப்பட்டன. ஒரு சாரத்துக்கு நாலேகால் யார் விகிதத்தில் சார உற்பத்திக்கு மட்டும் 1 கோடியே 50 லட்சம் யார்களே ஒதுக்கலாம். சேலேகள் போன்ற இதர துணிமணிகளின் உற்பத்திக்கு வருடாந்தம் 1 கோடி யார்களே ஒதுக்கலாம்.

### உண்மையான உற்பத்தி எவ்வளவு?

இன்றைய நிலேயில் தேசிய ஜவுளிக் கூட்டுத்தாபனம் கைத்தறியாளர்களுக்கு விநியோகிக்க நூலின் தொகையை அடிப்படையாக வைத்து கைத்தறித் துணிகளின் உற்பத்தி அளவை ஒருவாறு கணிக்கக் கூடியதாக இருக்கிறது. 1968/69ம் ஆண்டுகளில் தேசிய ஜவுளிக் கூட்டுத்தாபனம் 62 லட்சம் இருத்தல் நூலேக் கைத்தறியாளர்களுக்கு விநியோகித்திருப்பதால் 1968/69ம் ஆண்டுகளில் சுமார் 3 கோடியே 20 லட்சம் யார் கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்பட்டிருக்கலாம். கைத்தறியாளர்கள் பருத்தியுடன், பட்டு ரேயோன் போன்ற செயற்கை நூல்களேயும் பாவிப்பதால் அதனேயும் சேர்த்து மொத்தம்சுமார் 4கோடியே 20 லட்சம் யார் துணி உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் என்று கொள்ள இடமிருக்கிறது.

கைத்தறியாளர்களின் உற்பத்திச் ... இப்பொழுது எப்படியிருந்தாலும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ...

### கைத்தறிகளால் வேலேவாய்ப்புக்கள்

கைத்தறிகளால் ஓரளவுக்கு வேலேயில்லாத் திண்டாட்டம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று கொள்ள இடமுண்டு, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு சந்தை காண்பதும் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தரத்தை உயர்த்தி, கூடியமட்டும் விலேயைக் குறைத்து மில் துணிகளிடம் போட்டி போட வழி காண்பதுவும் வேறு விஷயம். ஆனுல் கைத்தறித் துறையில் எண்ணற்ற பல படித்த வாலிபர்களும் இளம் பெண்களும் இலாபகரமாக ஈடுபட்டிருக்கிருர்கள் என்பது மறுக்க முடியாத ஒன்ருகும், இந்த வேலேவாய்ப்பினுலும் ஏற்படும் சமூகப் பொருளாதார, அரசியல் பிரதிகூலங்களே இங்கே விரிவாகஆராய வேண்டிய அவசியமில்லே என நினேக்கிறேன்,

எழுதியவர்:
**— பெரி. சுந்தரலிங்கம் —**

அடுத்த சிறப்பம்சமாக கைத்தறிப் பொருட்களின் தனித்துவத்தைக் குறிப்பிடலாம். மில் துணிகளேப் போல ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான யார்களே ஒரு தினுசாக ஒரே அச்சில் வார்த்ததைப்போல உற்பத்தி செய்யலாம். தனி மனித ஆசைகள், அபிலாஷைகள், மோகங்களுக்கும் மதிப்பளித்து தனித்தனி மோதல்களில் உற்பத்தி செய்ய இடம் அளிக்கும் துறை கைத்தறித் துறை தான்.

மூன்ருவதாக கைத்தறி ஒன்றை நிறுவ ... ஏற்படும் ...

... க்கை விரிப்பு, திரைச்சேலேகள் போன்ற இன்னபிறரகங்களின் உற்பத்தியிலும் கைத்தறியாளர்கள் தனிக் கவனம் செலுத்தினுல், மின்தறி, மில்துணிப்போட்டியிலிருந்து பெருமளவு தப்பித் தலேதூக்கி நிற்கமுடியும்.

இறுதியாக இந்தியக் கைத்தறித்துணிகளுக்கு நம்நாட்டிலுள்ளகிராக்கியைப்பார்க்கும்போது நமது நாட்டுக் கைத்தறித் துணிகளுக்கும் அந்நியநாட்டுச் சந்தைகளில் கிராக்கி ஏற்படும் காலம் என்று வருமோ என்று ஏங்கத் தோன்றுகிறது.

### அரசியல்வாதிகளின் கடமையும் உண்டு

தமிழகத்திலே, கைத்தறியாளர்களின் கண்ணீர் துடைத்திட, அவர்தம் துயரில் பங்குகொண்டு, துன்பம் களேந்திட. மறைந்த மாமேதை அறிஞர் அண்ணுவும், அவர்தம் அருமைத் தம்பியடும், தமிழகத்தின் ஒவ்வொருநகரிலும், தெருத் தெருவாக கைத்தறித் துணிகளேச் சுமந்துசென்று விற்று, கைத்தறித் துணிகளுக்கே தனிமதிப்பு ஏற்படுத்திக் கொடுத்த நினேவு பசுமையாக இன்றும் நம் மனதில் நிலேத்துநிற்கிறது.

பொதுக் கூட்டங்களிலும், வரவேற்பு விழாக்களிலும் மலர் மாலேகளுக்குப் பதிலாக, கைத்தறி ஆடைகளே வேட்டி துண்டுகளேயே அணிவிக்கவேண்டும் என்று வலியுறுத்திப்பேசினுர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். இதனுல் எந்த மேடையிலும் கைத்தறித் துணிகளேப் பற்றியும், கைத்தறியாளர்களின் துயர்களேப் ...

# திருமலே நிர்வாகம்

I ம் பக்கத்தொடர்ச்சி

தமிழ்ப்பல்கலேக்கழக இயக்கத்தால் அரசாங்க ஆதரவு எதுவுமின்றி தமது சொந்தச் செலவிலேயே வாங்கப்பெற்ற ஏறக்குறைய 25 ஏக்கர் நிலப்பரப்பு இன்று திருகோணமலேயில் இருக்கிறது. ஒரு பல்கலேக்கழகத்தின் ஆணிவேரான நிர்வாகக்கூடம், பல்கலேக்கழக செனற் மண்டபம, துணே வேந்தரின் இல்லம் ஆகியன அங்கு அமைக்கப்படவேண்டும் என விரும்புகிறேம். இயந்திரவியல் கட்டடக்கலே, மின்சாரவியல், கப்பற்றுறை ஆகிய துறைகளில் பயில்வதற்காக பொறியியல் பிரிவு அமைவதற்கு திருகோணமலே மிகவும் பொருத்தமான இடமாகும். கீழை நாட்டின் தலேயாய தொழிற்கூடங்களும், பொறியியல் ஆய்வுகூடங்களும் முன்னுள் பிரித்தானிய கடற்படைத் தளத்தில் காணக்கிடக்கின்றன. இவைபோன்ற ஆய்வுகூடங்களேயும் இயந்திர சாதனங்களேயும் புதியதாக அமைப்பதற்கு எத்தனேயோ கோடி பணம் வேண்டும். இப்பழைய நிறுவனத்திற்கு மிகக்குறைந்த செலவில் சில பூச்சுவேலேகளும் சிறிய புனரமைப்பு வேலேகளும் செய்தால், எவ்வளவோ பெறுமதியான தொழிற்கூடங்களும், ஆய்வுகூடங்களும் புதிய பல்கலேக்கழகத்திற்கும் இந்நாட்டிற்கும் கிடைக்கும்.

திருகோணமலே மிக அண்மித்த எதிர்காலத்தில் ஒரு வரிவிதிப்பற்ற துறைமுகமாகவும், மாபெரும் வாணிப கைத்தொழிற் துறைகளின் கேந்திர நிலேயமாகவும் பரிணமிக்கும். இதனுல் ஒரு பல்கலேக்கழகத்தைத் திருக்கோணமலேயில் நிறுவுவது மிகவும் தூரதிருஷ்டியுடன் கூடிய செயலாகும். வர்த்தகப் பிரிவு, கணக்கியல் கணக்காய்வு வர்த்தக நிர்வாகம், பொதுநிர்வாகம் தொடர்பான கல்விக்கூடங்களும் திருகோணமலேயில் நிறுவப்படலாம்.

இந்நாடு கப்பற்றுறைத் ...

ஒரு 'இராமநாதன் கழகம்' அமைக்கவேண்டுமென்பதும் எமது விருப்பமாகும். இங்கு நாளாந்த பல்கலேச்கழகப் படிப்புடன், இலங்கையினின்றும், வெளிநாடுகளிலிருந்தும் வரும் அறிஞர்களால் குறிப்பிட்ட காலங்களில் பேருரைகள் நிகழ்த்தப்படலாம். இப்பேருரைகளுக்கு மாணவர்கள்மட்டுமேயன்றி பொதுமக்களுக்கும் அழைக்கப்படலாம். இத்தகைய பேருரைகளில் இந்து கலாச்சாரம், ஓவியம், இசை, நடனம், கோவிற்சிற்பங்கள் இன்சஞரன்ன இந்து கலாசாரத்துடன் இணேந்த தலேப்புகளில் பேசலாம். அலலது உலகப் புகழ்பெற்ற வல்லுனர்கள் அவற்றை நிகழ்த்திக் காட்டலாம்.

பல்கலேக்கழகத்தின் வேறு முக்கியமான பிரிவுகள் சில மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுவப்படவேண்டும். இங்கு இதற்கு வேண்டிய காணியும் கட்டிடவசதிகளும் மிகவும் குறைந்த செலவில் பெற முடியும். கலேப்பிரிவுப் பாடங்கள் வந்தாறு மூலேயில் போதிக்கப்படலாம். விவசாயம், விவசாயப் பண்ணே மிருக வைத்தியம், வனவியல் போன்ற பாடங்களும் ஏனேயதொடர்புள்ள பாடங்களும் மட்டக்களப்பிலேயே போதிக்கப்படல் வேண்டும். செய்முறைப் பயிற்சிக்கும் இங்கு வசதிகள் வேண்டும். மட்டக்களப்பில் இஸ்லாமியக்கல்வி கலாச்சாரக்கழகம் ஒன்று அக்பர் பெயரில் நிறுவப்படவேண்டும். இதற்கு 'அக்பர் இஸ்லாமிய கல்வி கலாச்சாரக் கழகம்' எனப் பெயர் சூட்டலாம். மொகலாய, பாரசீக, அராபிய வரலாற்றுப் புகழ்மிக்க கலே கலாச்சார வாழ்வில் காணக்கிடந்த கவின் கலேகள் இக்கழகத்தின் ஒரு பிரிவில் இடம்பெறலாம். உள்நாட்டு வெளிநாட்டுஅறிஞர்களால் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமென கலாச்சாரப் பேருரைகள் நிகழ்த்தப்பெறலாம், கலே நிகழ்ச்சிகள் நடாத்தப்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்றொழிலுக்கும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருக்கு எடுத்துக் காட்டினர்.

பூனகரி மகாதேவாலயம் கட்டிட வேலை பற்றி இங்கு கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு அமைச்சர் பதிலளிக்கையில் இது சம்பந்தமான அறிக்கை அடுத்த மார்ச் மாதத்திற்கு முன் கிடைத்துவிடும் என்றும் அதன் பின்னரே இது முடிவு செய்யப்படும் என்றும் சொன்னர்.

மயிலிட்டி மீன்பிடித் துறைமுக வேலை தொடர்ந்து நடைபெற ஒழுங்கு செய்யப்படுமென்றும், இதனைப் பெருப்பிப்பது பற்றி பின்னர் ஆராயப்படும் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. வள்ளங்களை கடலில் நங்கூரமிட்டு வைக்க ஒவ்வொரு கிராமங்களிலும் 'வான்' அமைத்துக் கொடுக்கவேண்டும் என்றும் எம். பி.க்கள் மகாநாட்டில் வற்புறுத்தினர். இறக்குமதி செய்யப்படும் வலைகளை அந்நிய செலவாணியிலிருந்து விதிவிலக்கு அளிப்பது பற்றி ஆராய நியமிக்கப்பட்ட குழு பரிசீலனை செய்து வருவதாகவும் அமைச்சர் சொன்னர்.

தொடர்ந்து எம். பி.க்களே ஆங்கிலத்தில் இம்மகாநாட்டில் பேசிக்கொண்டிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் பல கடற்றொழிலாளர்கள் குறுக்கிட்டு எம். பி.க்கள் ஆடசிமன்றத்தில் அமைச்சருடன் பேசிக்கொள்ளலாமென்றும், ஆங்கிலத்தில் பேசப்படுவது தங்களுக்குப் புரியவில்லையென்றும் எனவே அமைச்சருடன் தொழிலாளர்களைப் பேச சந்தர்ப்பம் கொடுக்குமாறு கேட்டபோது அதற்கு அமைச்சரும் பூரண சம்மதம் தெரிவித்தார்.

டைனமட் மூலம் மீன் பிடிப்பதை முற்றாகத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாவாந்துறை மீனவர் ஒருவர் சொன்னர். பண்ணை றேட் போடப்பட்டதால் நாவாந்துறை, சாவக்காடு, நவாலி, அராலி மீனவர்கள் பாதிக்கப்படுவதாகவும், ஆதலால் மற்றொரு பாலமும் கடலில் அமைக்கவேண்டுமெனவும் கேட்கப்பட்டது: சிறகு வலை பாவிப்பிற்கும் மீனவர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

நெல் உற்பத்திக்கு எத்தனையோ லடசம் செலவு செய்யும் தேசிய அரசாங்கம் மீன்பிடிக்கு உதவி செய்யாதிருப்பது கவலைக்குரியதென்றும், மீன்பிடியும்கூட ஓர் உணவு உற்பத்திதான் என்றும் கரையூரைச் சேர்ந்த திரு செல்வநாயகம் ஜே பி சுடடிக் காடடியதை அமைச்சரும் ஏற்றுக்கொண்டார்

கருவாடடுக்குத் தேவையான உப்பின் விலை அதிகரித்திருப்பது, வலைக்களவைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியங்கள் பற்றியும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது

வாழ்க்கைச்செலவு அதிகரித்து வருவதால் மீன்களை கூட்டுத்தாபனம் வாங்கும் விலையைக் கூட்டவேண்டும் எனவும் மீனவர்கள் அமைச்சரைக் கேட்டனர்

### ஆலைகளின் வேலைகள்

ஒவ்வொரு ஆலைக்கும் வீதி வழி நீர் வழங்கல் மின்சக்தி கழிவுநீர், வடிகால், கழிவுப் பொருள் முடிவாக்கல், தீ விபத்துத் தடுப்பு ஆதிய வசதிகள் வழங்கப்படும்.

முதல்படித் திட்டத்தில் நிர்வாக பரிபாலனக் கட்டடமும் எந்திரிகள் ஒட்டு வேலைக்காரர், புரிவெட்டுவோர், அச்சுவார்ப்பாளர் ஆதியோரைப் பெருக்கி வைக்கும் நோக்கமாக அடிப்படைக் கல்வித்தரங் கொண்டோருக்கு நவீன இயந்திரங்கள், ஆயுதங்கள் உபயோகித்தல் பயிற்சியளிக்கும் பயிற்சி நிலையமாகவும் இது திகழும்.

## மரண அறிவித்தல்

**சுப்புலட்சுமி அம்மா**

நவாலி அட்டகிரிக் கந்தசுவாமி கோவில் சோ. சண்முகரத்தினக் குருக்கள் மனைவி சுப்புலட்சுமி அம்மா 19-1-70 திங்கட்கிழமை இரவு காலமாகி விட்டார். அன்னரின் தகனக்கிரியைகள் 20-1-70 பிற்பகல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவிக்கிறேம். சண்முகரத்தினக் குருக்கள் நவாலி, அட்டகிரி.

1640

சாலைகள் பதிவுசெய்யப்படுமெனவும் அறியப்படுகிறது. இந்த அடிப்படையில் 1972ம் ஆண்டில் இலங்கையில் மொத்தம் 90,000 பதிவு செய்யப்பட்ட கைத்தறிகள் நெசவு தொழிலில் ஈடுபட்டிருக்கும். இவற்றேடுசுமார் 10,000 கைத்தறிகள் பதிவு செய்யப்படாமலேயே இயங்குகின்றனஎன்றும் கணிக்கப்பட்டுள்ளது. பதிவுசெய்யப்படாத கைத்தறிகள் தங்களுக்குத்தேவையான நூல் மற்றும் பொருள்களை கறுப்புச் சந்தையிலே பெற்றுக் கொள்கின்றன.

மின்தறிகளைப்போலவோ, பெரியதுணி ஆலைகளைப் போலவோ வருடமுழுவதும் கைத்தறிச்சாலைகள் செயல்படுவதில்லை அறுவடைகாலங்களில் குறிப்பாகவும்,வேறு கமவேலைகளில் இருக்கும் காலங்களில் பொதுவாகவும், இவை செயலற்றிருக்கின்றன. இந்தக் காரணங்களைக் கவனத்தில்கொண்டு, நாட்டிலுள்ள கைத்தறிச்சாலைகளின் மொத்த உற்பத்தியைக் கணக்கிடும்போதுபின் வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. எந்த ஒரு சமயத்திலும், சுமார் 25 சத விகித கைத்தறிகள் இயங்காமல் இருக்கின்றன.

2. ஒரு வருடத்தில் கைத்தறிச்சாலைகள் வேலை செய்யும் மொத்த நாட்கள் 280.

3. ஒரு கைத்தறியில் ஒருநாளைக்குசராசரிஇரண்டரையார்துணி நெய்யப்படுகின்றது.

### உத்தேச உற்பத்தி 4 கோடியே 70 லட்சம்

இந்த அடிப்படையில் கணக்கிடும்போது. இப்போது நாட்டில் உள்ள எல்லாக் கைத்தறிகளினதும் ஆகக்கூடிய உற்பத்தியின் அளவு 4கோடியே 16லட்சம் யார்கள்ஆகும். 1972ம்ஆண்டளவில் இது 4 கோடியே 70 லட்சமாகும்.

இந்தக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்ட கைத்தறிகளில் உற்பத்தியாகக் கூடிய துணிகளின் அளவு (சுமார் 50 லட்சம் யார்கள்) சேர்க்கப்படவில்லை.

மேலே குறிப்பிட்டது கைத்தறிகளின் உத்தேச மொத்த ஆகக்கூடிய உற்பத்தியின் கணக்குத்தான். ஆனல் உண்மையில் நம் நாட்டுக் கைத்தறிகளிலிருந்து எவ்வளவு துணி நெய்யப்படுகின்றது என்பதற்கு சிறு கைத்தொழில் இலாகாவிடம் எந்தவிதமான புள்ளி விபரமும் கிடையாது. ஆனல் 1967க்கு முன் ஆகக்கூடிய வருடாந்த உற்பத்தி பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று கொள்ள இடமிருக்கிறது.

கைத்தறியாளர்களின் உற்பத்திச் சக்தி இப்பொழுது எப்படியிருந்தாலும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய, பெரிய துணி ஆலைகள் எல்லாம் செயற்பட ஆரம்பிக்கும் போது, கைத்தறியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தை தேடி அலைய வேண்டிய தர்மசங்கடமான நிலை ஏற்படத்தான் போகிறது. இந்தப் புதிய துணி ஆலைகள் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் இயங்கும் போது உள்நாட்டுத் துணி உற்பத்தி 10 கோடி யார்களால் அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

### கைத்தறியும் மின்தறியும்

அதிக உற்பத்தியினல் ஏற்படும் இயல்பான பிரச்னையோடு கைத்தறித் துணிகளின் தரமும் அவற்றின் விலையும் மேலும் சிக்கலை உண்டாக்கி கைத்தறியாளர்களின் பிரச்னையை மேலும் உக்கிரப்படுத்துகின்றன.

மின்தறியில் ஒரே நாளில் 40லிருந்து 60 யார் வரை தயாரிக்கலாம். ஆதலால் ஒரு நாளில் இரண்டரை அல்லது மூன்று யார் மட்டுமே உற்பத்தி செய்யக் கூடிய கைத்தறியின் துணி விலை அதிகமாகத்தான் முடியும். இந்த விலை வித்தியாசத்துக்கு இன்னுமொரு காரணம். கைத்தறியாளர்கள் இப்போது உபயோகித்து வரும் விலை கூடிய இரட்டை நூல், எது எப்படியிருந்தபோதிலும் மின்தறி உற்பத்திகளைவிட கைத்தறி உற்பத்திகளின் 'விலை ஒருபோதும் குறைவாக இருக்க முடியாது.

இதோடு கைத்தறித்துணிகளின் தரத்தையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு கைத்தறியையும் இயக்குபவரின் பயிற்சி, அனுபவம், திறமை இவற்றுக்குத் தக்கபடி ஒவ்வொரு கைத்தறியிலிருந்தும் வெளிவரும் துணிகளின் தரமும் ஏற்றம், இறக்கம் உடையனவாகவே இருக்கின்றன.

கைத்தறித் துறையைப் பொறுத்தமட்டில் மேற்கூறிய குறைபாடுகள்காணப்பட்டபோதும் கைத்தறியின் சிறப்பம்சமாக கொள்ளக்கூடிய சில இயல்புகளையும் இங்கு சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

மதிப்பளித்து ... அளித்தனி மோதல்களில் ... உற்பத்தி செய்ய இடம் அளிக்கும் துறை கைத்தறித் துறைதான்

மூன்றுவதாக கைத்தறி ஒன்றை நிறுவ ஏற்படும் ஆரம்பச் செலவும் முடங்கும் மூலதனமும் மிகக் குறைவு. அந்நிய செலாவணிப் பிரச்னைகள் எதுவும் கிடையாது. எனவே சாதாரண, பாமர கிராமப்புற மக்களும் பங்குபற்றக்கூடிய வாய்ப்பை அளிப்பது கைத்தறிகள் என்றல் சாலப் பொருத்தம்தான்.

கைத்தறிகளின் உற்பத்தி கைத்தறித் துணிகளின் குறை நிறைகள் இவற்றை மேலெழுந்தவாரியாக ஆராய்ந்த பின் கைத்தறியாளர்களின் எதிர்காலப் பிரச்னைக்கு உற்பத்திப் பெருக்கத்தின் மத்தியிலே கைத்தறிப் பொருட்களுக்கும் சந்தை உண்டாக்குவது எப்படி என்பதுபற்றியும்சற்றே பார்ப்போம்.

### மூன்று வழிகளில் தீர்க்கலாம்

இலங்கையில் கைத்தறிப் பொருட்களுக்குச் சாதகமான சந்தை ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பின்வரும் மூன்று வழிகளைக் கொள்ளலாம்.

1. சாரங்கள்,வேட்டிகள் பிஜாமா சாரங்கள் ஆகியவற்றின் உற்பத்தியை கைத்தறித்துறைக்கே ஏகபோகமாக விட்டுவிடுவது, அதாவது,துணி ஆலைகளோ, மின்தறிகளோ மேற் றப்பட்டுள்ள பொருட்களை உற்பத்தி செய்யக்கூடாது என்று முற்றாகத் தடைசெய்தல். இப்படிச்செய்தால் சுமார் 1கோடியே 80 லட்சம் யார் துணிக்கான சந்தை ஏற்படும்.

2 சேலை உற்பத்தியில் 50 சதவிகித உற்பத்தியைகைத்தறித்துறைக்கு ஒதுக்குவது இப்படிச் செய்யும் பட்சத்தில் மேலும் 1கோடியே 80 லட்சம் யார்க்கான சந்தைக் கிடைக்கும்.

3 தனிப்பட்டுச்சேலைகள், சட்டை, பெண்களுக்கான துணிகள் இவற்றின் உற்பத்தியையும் கைத்தறித்துறைக்கே ஏகபோகமாக ஒதுக்குவது, இப்படிச்செய்வதால் மேலும் 20 லட்சம் யார்க்கான சந்தை நிறுவப்படும்.

இப்படியாக மூன்று வழிகளிலும் சுமார் 3 கோடியே 80 லட்சம்யார் கைத்தறித் துணிகளுக்கான சந்தை கிடைக்க ஏதுவாகும்.

இவற்றேடு அன்றட வீட்டுப் பாவனைக்கும்,மனை அலங்காரப் பொருட்களுக்காக பாவிக்கப்படும் மேசை விரிப்பு, கைக்குட்டைகள், படுக்கைவிரிப்புகள் ... விக்கவேண்டும் என்று வலியுறுத்திப்பேசினர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். இதனல் எந்த மேடையிலும் கைத்தறித் துணிகளைப் பற்றியும், கைத்தறியாளர்களின் துயர்களைப் பற்றியும்பேசப்பட்டது. மக்களின் கவனம் கைத்தறியாளர்களை எதிர்நோக்குகின்ற பயங்கரப் பிரச்னைகள் மீது படிப்படியாகத் திருப்பப்பட்டது.

இதனை எதற்காக இங்கு குறிப்பிடுகிறேன் என்றல், நம் நாட்டு அரசியல்வாதிகளும், கைத்தறியாளர்களின் பிரச்சினைகளைத் தங்களால் இயன்றவரை தீர்த்து வைக்க தனிப்பட்ட முறையிலும், கட்சி ரீதியாகவும் எந்தவகையில் உதவலாம் என்பதை எடுத்துக் காட்டத்தான்

பொதுத்தேர்தல்நெருங்கி வரும் இச்சமயத்தில் அரசியல் வாதிகள் மலர் மாலைகளுக்குப் பதிலாக கைத்தறி ஆடைகளைத்தான் ஏற்றுக் கொள்வோம் என்று தீர்மானித்துக்கொண்டாலு இனி கைத்தறி உடைகளையே அணிவோம் என்று தீர்மானித்துக் கொண்டாலும் கூட கைத்தறியாளர்களுக்குத் தற்காலிகமாவாவது ஓரளவு மனத்திருப்தி உண்டாகும் என்பதில் ஐயமில்லை!

திருக்கோணமலை, திங்கள் வெள்ளை மணலில் சிங்களப்பாடசாலை யொன்றைக் கல்விஇலாகா நிறுவப்போகின்றது. இப்பகுதியில் உள்ள சிங்களபெற்றேரின் வேண்டுகோளின் பேரிலேயே இப்பாடசாலை நிறுவப்படவிருக்கின்றது.

### பிரிவுபசாரம்

வெள்ளவத்தை, திங்கள் இலங்கை தபாற்தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து ஓய்வுபெறவிருக்கும் திரு. கனகசபை முதலிக்கு அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் பிரிவுபசார விழாவொன்றினை நடாத்த ஏற்பாடுகளை செய்துவருகின்றது. திரு, கனகசபைமுதலி சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் முன்னள் தலைவரும் ஆவார்

### 'இந்திராவும் இந்தியாவும்'

உடுவில், திங்கள் சுன்னகம்பட்டினசபையின் ஆதரவில் நூல்நிலைய ஆராய்வுக்குழு நடாத்தும் கருத்தரங்கநிகழ்ச்சியில் இம்மாதம் 22ம் திகதிமாலை 'இந்திராவும் இந்தியாவும்' என்னும் பொருள்பற்றி திரு.வி. பொன்னம்பலம் உரைநிகழ்த்துவார்.

... கணக்காய்வு வர்த்தக நிர்வாகம், பொதுநிர்வாகம் தொடர்பான கல்விக்கூடங்களும் திருகோணமலையில் நிறுவப்படலாம்.

இந்நாடு கப்பற்றுறைத் தொழிலை வளர்த்துக்கொள்ளவேண்டும் வளர்க்குமென நம்புகிறேம். அத்தகைய வளர்ச்சிக்கு கப்பற்றுறைப் பொறியியலும் அத்தோடிணைந்த வர்த்தகப் பயிற்சிகளும் பயன்படுத்தப்படின் மிகவும் பொருத்தமானவையும் நாட்டிற்கு நலமுடையதுமாகும். மிகக்குறைந்த செலவுடனும் குறுகிய காலத் திற்குள்ளும்நிலப் பற்றுக்குறை, கட்டிடங்கள் இடவசதி போன்ற பிரச்சனைகளில் அதிக கஷ்டத்திற்கு இடமின்றியும் மேலே குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுதற்குப் பொருத்தமான இடம் திருகோணமலையாகும்

அத்துடன் திருகோணமலை ஓர் சர்வதேசச்சந்தையாகவும் வெளிநாட்டு உல்லாசப் பயனிகளைக்கவரும் இடமாகவும் விளங்குமாகையால் இங்கு ஒருபன்மொழிக்கடம் அமைக்கப்பெற்று அங்கு நவீன மொழிகளான தமிழ், சிங்களம், ஆங்கிலம், அராபியமொழி, பிரெஞ்சு, ஜெர்மன், இந்தி, ஸ்பானியம், உருஷ்ஷிய மொழி, சீனம், ஜப்பானிய மொழி, இத்தாலிய மொழி போன்ற வேறு நவீன உலக மொழிகளும் போதிக்கப்படல் வேண்டும்.

மருத்துவ விஞ்ஞானப்பிரிவுகள் யாழ்ப்பாணத்திலேயே நிறுவப்படவேண்டுமென விரும்புகிறேம், இப்பாடங்களுக்குத் தோற்றும் மாணவர்களில் பெரும்பான்மையோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், திருகோணமலையில் இவர்களுக்கு விடுதி வசதி தேடும் நிலை தவிர்க்கப்படலாம். மருத்துவசபையின் சட்டத்திற்குஅமைய உருவாக்கக் கூடியதாக மருத்துவ மாணவர் பயிலுவதற்கேற்ற ஒரு மருத்துவ மனையாக யாழ்ப்பாணம் அரசினர் மருத்துவமனை விளங்குகிறது இலங்கையில் கொழும்பிலும், இப்போது கண்டியிலும், தவிர்ந்த ஏனைய இடங்களில் இத்தகைய வசதிகளோடு கூடிய மருத்துவ மனை வேறெங்கும் கிடையாது, மருத்துவக் கல்விக்குத் தேவையான இரண்டொரு கூடங்கள் மேலும் கட்டப்படவேண்டும்

இன்றைய பரமேஸ்வராக் கல்லூரிக்கட்டடத்தில்இராமநாதன் பெயரில் இந்து தத்துவமும் தர்ம சாத்திரமும் போதிப்பதற்கான நாட்டு வெளிநாட்டுஅறிஞர்களால் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமென கலாச்சாரப் பேருரைகள் நிகழ்த்தப்பெறலாம், கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பெறலாம்.

### 4-வது டெஸ்ட்

## சமமாக முடிவுற்றது

கல்கத்தா, ஜன. 19

இலங்கை மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்கும், பாரத மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் கல்கத்தாவில் நடைபெற்ற 4-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விபரம்: பாரதம் முதல் இன்னிங்ஸ்: 181, இரண்ராவது இன்னிங்ஸ்; 277—8 இலங்கை: முதல் இன்னிங்ஸ்: 296—9,

### தேசிய......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க. துரைரத்தினம் எம். பி; செனட்டர் நடராஜா வி. தர்மலிங்கம் எம். பி; கா. பொ. இரத்தினம் எம். பி; மு. சிவசிதம்பரம் எம். பி; ஆகியோரும் கைத்தொழிற் சாலை அதிபர்களும் சமூகம் அரசாங்க அதிபர்களும் கொடுத்திருந்தனர்.

உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் நன்றிதெரிவித்துப்பேசினர்.

### கைத்தொழில்நாடாக..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறினர்.

அடுத்து கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில், பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க அளவு விடிவு ஏற்பட்டுள்ளது.பொருளாதாரம் விவசாயத்தில் மாத்திரம் தங்கியிருக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் இது ஒரு கைத்தொழில் புரட்சியென்றே கூறலாம். அரசாங்கம் தமிழர்களை வடபகுதியைப் புறக்கணிப்பு செய்கிறதென்பதற்கு முடிவாக இன்று இது ஆரம்பிக்கப்படுகிறது. இத்திட்டம் அச்சுவேலிக்கு மாத்திரமன்றி அகில இலங்கைக்கும் பிரயோசனமளிக்கத் தக்கதெனவும் கூறினர்.

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், யாழ். அரசாங்க அதிபர் திரு.பிரான்சிஸ் பீற்றர்ஸ் உட்பட பலர் பேசினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org